Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
பெப்ரவரி 23 - 29, 2012
ரூபா 30.00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 951

## விசாரணைகள்

### உண்மைக்காகவா – ஊருக்காகவா?

## ஆர்ப்பாட்டம்

### மக்களைத் தூண்டும் மந்திரம்



## நடுக்கடலில் தாக்குதல்!

### நடந்தது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கான அடிப்படைகள்

வெற்றியது முதுமையை அடைவதற்காக அல்ல. நிலையான மகிழ்ச்சியை உணர்வதே பிறப்பின் நோக்கம் இதையே, மோட்சம் என்று குறிப்பிடுகிறார்கள். மனிதப் பிறவி முழுமையை அடைவதன் அர்த்தமே இதுவாகும்.

உள்ள ஆற்றலை அறிந்து வழியாக இருக்கும் மறைமுக இடைஞ்சல்களை அப்புறப்படுத்த வேண்டும். அப்போது தான் உன்னதத் தன்மையை தெளிவாக நாம் அறியமுடியும். உள்ளதைப் பற்றி ஆராய்ச்சியில் அகந்தை, தடுமாற்றம் போன்ற சறுக்கல்கள் இருக்கலாம். ஞானம் இல்லாததால் அவை மறைந்து விடும்.

இறைவன் அருள் அறிந்தவன் நமக்குத் தெரிந்தது கொஞ்சம் தான். எல்லாமே தான் தெரிந்த ஒருவனின் அறிவும் குறிப்பிட்ட எல்லைகளுள் வரையறுக்கப்பட்டதே. மனித அறிவு சிற்றறிவே. எல்லாம் அறிந்த இறைவனின் அறிவு எல்லையற்றது.

வெற்றிக்கு அடிப்படைகள் மூன்று. உழைப்பு, காலம், தெய்வம். உழைப்பு நம் கையில் இருக்கிறது. காலத்திற்காகவும் அதற்கான தருணத்திற்காக நாம் காத்திருக்க வேண்டியிருக்கும். தெய்வ அருளை வழிபாட்டின் மூலம் பெறலாம். தெய்வ அருள் இருந்தால் மட்டும் தான் ஒரு செயல் வெற்றி பெறும்.

## ஒருவரை ஒருவர் தாங்குங்கள்

ஆண்டவர் நன்மை செய்பவர் ... தீமை புரியும் செயலர் என்று தங்கள் உள்ளங்களில் சொல்லிக் கொண்டு மந்தநிலையில் சார்ந்து இருக்கிறவர்களைத் தண்டிப்பேன்

அமைதிக்கு வழிவகுப்பவற்றை நாடுவோமாக! ஒருவர் மற்றொருவருக்கு வளர்ச்சி தருபவற்றைச் செய்ய முயலுவோமாக. சிறுமுற்றுவதும் பாவத்தைச் செய்யாதிருங்கள்.

மடிக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள்.

தீயவரின் கூடாரத்தில் ஒளி இருளாகும். அவர்கள் மீது ஒளிரும் விளக்கு அணைந்து போகும். ஒளியிலிருந்தவர் தீயவர்கள் இருளுக்குத் தள்ளப்படுவது உறுதி.

பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்.

முழுமனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்குங்கள் வல்லுநர் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு கொள்வார். அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்.

## இறை நம்பிக்கையோடு வாழ்வோம்

அளவு கடந்த வறுமை ஒருவனை இறை மறுப்பின் (குப்ரின்) அருகில் கொண்டு செல்லுகிறது ஆனால், இந்த வறுமையிலும் எனக்கு நல்லவையுண்டு என்று அவனது உள்ளத்தில் உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறதோ அவனை வறுமை மூழ்கடிக்க இழுக்கிறது.

அல்லாஹ்தான் எம்மை காப்பவன், இரட்சிப்பவன், உணவளிப்பவன் என்றும் உண்மையை உணர்ந்து பாடுபட்டு தேடும் பணம் பயனும், நலமும் தரும். வறுமையை இஸ்லாம் விதைக்கவுமில்லை, வளர்க்கவுமில்லை.

ஆகவே, நாம் அல்லாஹ் வழங்கியுள்ள அறிவுச் சிறப்பையும், சிந்தித்து உணரும் வல்லமையையும் நன்மை, தீமை இவை யென பகுத்தறியும் இயல்பையும் பயன்படுத்தி இறுதி மூச்சுவரை இறை நம்பிக்கையோடு வாழ்வோம்.

எம். சி. கஸ்ஸி,
கல்முனை – 05

## வாசகர் சாலை

### நெஞ்சம் மறப்பதில்லை

தற்போதைய தேவை அறிந்து நாளுக்காகவும் யதார்த்தமான உணர்வுபூர்வமாக தினமுரசு வருவது மகிழ்ச்சிக்குரியது. அரசியல் கட்டுரைகள் எம்மவரதில் ஏற்படும் ஐயங்களைப் போக்கும் வகையில் அமைந்துள்ளது. அரசியல் கட்டுரைகளையே நான் கூடுதலாகப் படிப்பதுண்டு.

கோவை நந்தனின் கட்டுரை வெளிவராதது எனக்கு மிகவும் மனக் குறையாக உள்ளது.

செ.நித்யஸ்ரீ, திருகோணமலை.

### மாற்றம் தேவை

முரசில் இடம்பெறும் அத்தனை அம்சங்களும் என்னைக் கவர்ந்தவை. நான் முதற்கண் சொல்ல வேண்டியது இதைத்தான். அதாவது, சினிமாப் பக்கம் பல வர்ணத்தில் வருவது சூப்பரோ சூப்பர். அடுத்து முரசினுடைய முதற்பக்கத்தில் மாற்றங்களை எதிர் பார்க்கின்றேன். ஏனைய பக்கங்களிலும் மாறுதல் தேவை.

எவ்.எம்.நஸீரா, கிண்ணியா.

### உணர்வுபூர்வமானவை!

முரசே வணக்கம்!

காதில பூ கந்தசாமி யார் தந்த விளக்கத்தோடு பிரமாதம். கற்பனையென்று நமது இரு காதுகளுக்கும் பூச்சூட வேண்டாம். காதில பூ கந்தசாமியார் சொல்வதெல்லாம் உண்மைதான். காதில பூ கந்தசாமியார் உண்மைகளை கற்பனைகளாக உணர்வு பூர்வமாகத் தருகிறார்.

சி.மந்த்ரா, நுவரெலியா.




### முரசின் பாராட்டு


மக்களின் மனதை கவர்ந்த முரசே
மண்ணில் சாதனை புரியும் முரசே!
வெற்றிக் கொடி நாட்டு முரசே!
வெற்றி வாகை நீயே!

சூரியனை விட வேகமாக வருவாய்
சூறாவளியை விட புதிதான
விடயம் தருவாய்
உலக செய்திகள்
அனைத்தையும் தருவாய்
உலகை
வெல்ல நட்டை எழுதுவாய்

உலகின் முத்தவன் முரசு
உலகில் சிறந்தவன் முரசு
உண்மையை அறிய முரசு
உனது வெற்றி கொடி பறக்கும் முரசு

பு. சசீலன்,
பொன்னாலை.

## கவிதைப் போட்டி இல.951



வனைத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளில் வடிவிக்க அறியலாமா, தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்ப வைப்பீர்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி 12.03.2012

கவிதைப் போட்டி இல. 951 தினமுரசு வாரமலர்.
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நட்டம்

சட்டம், சமூகம் ஏன்
சமயமும் அல்லவாதான்!
நட்டம் உங்களுக்கும்
நாட்டுக்கும் தானே!!

கே.எஸ். சிவஞானராஜா,
கொக்குவில்.

### சுதந்திர உலா

"சட்டம் எம்மை
என்ன செய்யும்"
என்றே
சண்டித்தனத்தில்
இட்டம் போல்
சுதந்திர
உலா வரும்
இளம்
மட்டங்களுக்கு
கால் கட்டுத்தான்
என்னவோ?

கிண்ணியா முத்தாலிப்.

### நட்பு

விளையாட்டிலும்
... 
- கவி
சிறுவயதின் சினமா
உயிர் குடிக்கும் நாளை?

எம்.எச். ...,
பொலன்னறுவை.

### சட்ட விரோதம்!

முதுமொழிக் கொள்கை
முன் வைத்திருப்பீர்
நம்வழி செல்கின்ற
நமது மூவரும்
இப்போ முன்னால்
இசைத்திடும் பிழையாலே
சுற்றைக் கைது செய்
கைங்கரியம் நிகழலாம்!
எம் நாட்டு சட்டத்து
ஏற்காது உந்துருளி
மூவர் சென்றிடல்!

க. யோகானந்தன்,
சம்மாந்துறை தெல்லிப்பளை.

### நவீன காலர்கள்

சட்டம் ஒழுங்கை மீறும்
சில்லறைகள் உள்ளவரை
பாதசாரிகள் பக்குவமாய்
பயணித்தபோதும்
பரிதாப சாவுகளின்
எண்ணிக்கையும்
பரிணமிக்கத்தான் செய்யும்

ஏ.எம்.அஸ்.அக்தர்,
ஏறாவூர் – 2

### நிறைவேறுமா?

ஒன்றோடு ஒன்றாக,
பின்னிப்பிணைந்த
அன்பான பாசமலர்கள்
தலைக்கவசம் இல்லாமல்
பயணம் செய்யும்
இந்த – மூவரையும்
காவல்துறை கண்டால்
இவர்களின்...
பயணம் நிறைவேறுமா.?

வி. அருள்ராஜா,
கொம்மாந்துறை.

### பொறுப்பற்ற போக்கு

விபத்துக்கள் நிகழ்வதும்
விபரீதங்கள் விளைவதும்
விலைமதிப்பற்ற உயிர்கள்
விண்ணுலகம் ஏகுவதும்
மனிதர்கள் சிலரின்
பொறுப்பற்ற
செயலாலன்றி
வேறென்னவென்றுரைப்பதாம்

க. சமால்தீன்,
ஏறாவூர்–3

## கவிதைப்போட்டி இல.946

### பாராட்டுக்குரியது



### தப்பு!

வருசத்திற்கு ஒன்று
என்று நடந்த
வீதி விபத்துக்கள்
இன்று நிமிசத்திற்கு
ஒன்று என்று
நடக்கிறதே!
அன்புயிர்களே
தலையில்
'கெல்மெற்' இல்லை
உந்துருளியில்
மூவர் பயணிக்கின்றீர்களே
நீங்கள்
வீதி உலா வருவதை
அந்த மபிக் பொலிசு
காணவில்லையா!

ராணிமகள் றெசிந்தா,
சங்கத்தார்வயல்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்-
(E-mail:- tdinamurasu@live.com

## உங்கள் பக்கம்

### தன்னிச்சையான தனியார் போக்குவரத்து சீர்செய்யப்பட வேண்டும்

தனியார் பேருந்துகள் மக்களுக்குத் தேவையான சேவைகளை உரிய முறையில் வழங்காது, குறுகிய நலன்களுடன் செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக, வன்னி போன்ற பிரதேசங்களில் இது பெருமளவில் நடைபெற்றுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

குறித்த பிரதேசங்களுக்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மேலதிகாரிகள் அதிரடி விஜயங்களை மேற்கொள்வது மிகவும் குறைவு என்பதாலும் தனியார் போக்குவரத்தின் கடமைகள், உரிமைகள் என்பவை பற்றி மக்களுக்குப் போதிய அறிவின்மையாலும் இவ்வாறு நடைபெறுகின்றது.

உதாரணமாக, வவுனியா-முல்லைத்தீவு வழிக்கட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள பேருந்து ஒன்று புதுக்குடியிருப்பு நகரத்துடன் தமது சேவையை மட்டுப்படுத்திக் கொள்கின்றது. புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள கேப்பாப்புலவு வீதியின் மோசமான நிலைமை காரணமாகவும், குறித்த பகுதியில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படாததால் குறைவான வருமானத்தைக் கருத்திற் கொண்டும் இவ்வாறு தனியார் பேருந்து உரிமையாளர்கள் தன்னிச்சையாக நடந்து கொள்கின்றனர். இது பொதுமக்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்குகின்றது. இது போல் வன்னியில் பல்வேறு குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்படுகிறது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கே.ராதாகிருஷ்ணன், புதுக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் விலை அதிகரிக்கலாம் நிதியமைச்சு அதிகாரிகள் தெரிவிப்பு

இலங்கையில் பொருட்கள் சேவைகளுக்கான விலைகள் மேலும் உயர்வடையக் கூடும் என நிதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் கடன் தொகையை குறைப்பதற்கு வரி அறவிடு செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் மீது வரி விதிக்கப்பட்டால் அதன் சுமையை நுகர்வோரே பொறுப்பேற்க நேரிடும்.

இவ்வாறு பொருட்கள் சேவைகளுக்கான விலைகளில் அதிகரிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். பேக்கரி உற்பத்திகள், பால் மா உள்ளிட்ட பலவற்றின் விலைகளை உயர்த்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து கட்டணங்களும் உயர்த்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது

ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மீது அந்நியசெலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதி மன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க முதலீட்டு நிறுவனமொன்றின் உரிமையாளரும், இலங்கைத் தமிழருமான ராஜ் ராஜரட்னம் என்பவர் அனுப்பி வைத்த பணத்தைத் தவறான நோக்கத்திற்காகத் தனியார் வங்கி ஒன்றில் வைப்புச் செய்ய உதவியதற்காக ரவி கருணாநாயக்க எம்.பி. மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அதனை ஒத்தி வைப்பதாக மேல் நீதிமன்ற நீதியரசரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விருதுரையை கழிக்கின்றாராம்

## அமைச்சர் மேர்வின் சில்வா



பல்வேறு சவால்கள், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற நான் தற்பொழுது சிறு விடுமுறையில் பொழுதைக் கழித்து வருவதாகப் பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அம்பாலங்கொடை பிரதேசத்தில் வைத்து காலி மாவட்ட பௌத்த சம்மேளனத்தின் தலைவர் பன்னத்துர சுமனஜோதி தேரரால் 'பிரேமி ஜனரஞ்சன' என்ற கௌரவ நாமம் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்குச் சூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேர்வின் சில்வா மேலும் கூறுகையில், தனக்கு எதிராகப் பல்வேறு சவால்கள் காணப்படுவதாகவும் தன்னை அசைத்துப் பார்ப்பதற்குப் பலர் முயற்சிப்பதாகவும் அவற்றையெல்லாம் தாண்டி நான் மக்கள் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டை சூழ்ச்சிக்காரர்களிடம் காட்டிக் கொடுக்கமாட்டேன்



## -ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

**சூழ்ச்சிக்காரர்களிடம் நாட்டைக் காட்டிக்கொடுக்க மாட்டேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். மக்கள் என்னைப் பதவி நீக்கவோ அல்லது விரட்டவோ முடியும். அது மக்களின் விருப்பம்.**

**எனினும், அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு அடிவருடிகள் மற்றும் சூழ்ச்சிக்காரர்களுக்கு இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கத் தயாரில்லை. பலவந்தமான முறையில் அரசாங்கங்களைக் கவிழ்க்க முடியாது. ஜனாதிபதிப் பதவியிலிருந்து விரட்டியடிப்பது சுலபமான காரியமல்ல. மக்களினால் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே நான் செல்வேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

# நாமல் ராஜபக்ஷ பாலஸ்தீனத்திற்கு விஜயம்

நாமல் ராஜபக்ச தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று பாலஸ்தீனத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினரை, பலஸ்தீன ஜனாதிபதி முஹம்மட் அப்பாஸ் வரவேற்றுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவிற்கும், பாலஸ்தீன ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

அண்மைக்கால சமாதான முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதி அப்பாஸ், இலங்கைப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளார். பாலஸ்தீன பிரதமர் சலாம் பய்யாட்டையும் இலங்கைப் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

# விமானப்படை வீரரிடம் கஞ்சா மீட்பு

கஞ்சா போதைப்பொருளை கடத்திய விமானப் படை வீரர் ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட விமானப்படை வீரரிடமிருந்து நான்கு கிலோ கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் வெல்லவாய பிரதேசத்திலிருந்து கஞ்சா கடத்தியுள்ளதாக வட மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான உயர் காவல்துறையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் விமானப்படை முகாமில் கடமையாற்றியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டும்

அரசியல் அமைப்பில் மாற்றம் தேவை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மக்களின் அபிலாசைகளை நாடாளுமன்றில் நிறைவேற்றக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டுமென கோரியுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள தற்போதைய அரசியல் அமைப்பு ரத்து செய்யப்பட வேண்டும்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றினால் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளக் கூடிய வகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

அரசியல் அமைப்பின் ஜனநாயகத் தன்மையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கப்படும் என அரசாங்கங்கள் உறுதியளித்த போதிலும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜ கட்சி, ஸ்ரீலங்கா கொம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மஹாஜன கட்சி மற்றும் தேச விடுதலை மக்கள் கட்சி ஆகியன கூட்டாக இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன.

# சுயாதீன விசாரணை பொறிமுறை அவசியம்

## உலக மனித உரிமை அமைப்புக்கள்

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென உலக மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட 13 முன்னணி மனித உரிமை அமைப்புக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இலங்கையில் சுயாதீன விசாரணைப் பொறிமுறையை ஒன்றை உருவாக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது ஐக்கிய நாடுகளின் பொறுப்பாகும் என அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் மீது சில சர்வதேச அமைப்புக்கள் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

# காத்தான்குடியில் குழுச்சண்டை

காத்தான்குடிப் பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கைகலப்பில் ஐந்து பேர் காயம் அடைந்துள்ளனர்.

காத்தான்குடி காஸிம் அலி பள்ளிவாசலுக்கு முன்பாக இடம்பெற்ற இக்குழுச் சண்டைக்கு மார்க்க ரீதியான கருத்து வேறுபாடுகளே காரணமாக அமைந்ததென தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவி கடத்தல் பொகவந்தலாவையில் பரபரப்பு

பொகவந்தலாவை சீனக் கலை தோட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு [illegible] செடிகளுக்குள் வீசியெறிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

அறிந்த மாணவி கடந்த 2[illegible] ஆம் திகதி காலை பாடசாலை சென்று கொண்டிருந்த வேளையில் [illegible] முச்சக்கர வண்டியில் வந்த நான்கு பேர் அடங்கிய கும்பல் குறித்த மாணவியை இழுத்துச் [illegible] அவரது கைகளையும், வாயையும் கட்டிய நிலையில் [illegible] செடிகளுக்கிடையே இழுத்துச் சென்றுள்ளனர். இதனை அவதானித்த தோட்டத் தொழிலாளர்கள் மாணவியை மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். [illegible] பிரதேசத்தைச் சேர்ந்த இம்மாணவி கடத்தப்பட்டது தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனிதத் தலமாகிறது கொக்கட்டிச்சோலை

மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற பட்டிப்பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இது அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை கருணா அம்மான் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் முரளிதரன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தின் பிரதேசத்தில் தேவையற்ற சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதும், மதுப்பாவனை, மதுவிற்பனையை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் போர்மேகம்!

# எச்சரிக்கும் ரஷ்யா



சர்வதேச விதிமுறைகளை மீறி, போர்வெறியுடன் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால், அது ரஷ்யாவின் தெற்கு பிரதேசங்கள் அனைத்தையும் போர்ச்சூழலுக்குள் தள்ளும். மேலும், இதையடுத்து மிகப் பெரும் போராக அது மாறும் என்றும் ரஷ்ய இராணுவத்தளபதி ஜெனரல் நிகோலாய் மக்கரோவ் எச்சரிக்கை விடுத்துள்ளார். இன்னும் சில மாதங்களில் ஈரான் மீது போர் தொடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமெரிக்கா மேற்கொண்டிருக்கிறது என்று அவர் எச்சரித்தார். அமெரிக்கா தாக்குமானால், அதே அளவுக்கு ஈரானும் பதிலடி கொடுக்கவும் தயாராகி வருவது தெரிகிறது என்றும் அவர் கூறினார்.

"உலக அரங்கில் ஈரான் என்பது மிகவும் கேந்திரமான ஒரு நாடு. அந்நாட்டின் மீது அநேகமாக வரும் கோடை காலத்தில் தாக்குதல் நடத்தப்படக்கூடும் எனத் தெரிகிறது" என்று ரஷ்ய இராணுவத்தலைமை தளபதி ஜெனரல் நிகோலாய் மக்கரோவ், மொஸ்கோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கூறினார். தான் தாக்கப்பட்டால் அதே அளவிற்கு மிகவும் கூர்மையான பதிலடித் தாக்குதலை நடத்துவதற்கு ஈரானுக்கும் சக்தி இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மீள முடியாத முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியில் அமெரிக்கா சிக்கித்தவிக்கிறது. தனது பொருளாதாரம் மேலும் மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுத்து நிறுத்த எண்ணெய் வளம் கொண்ட லிபியாவைத் தாக்கி கைப்பற்றிய அமெரிக்க நிர்வாகம், அடுத்து ஈரானுக்கு குறிவைத்துள்ளது. நீண்ட காலமாகவே ஈரானின் அணுசக்தி திட்டங்களை அமெரிக்கா திட்டமிட்டு விமர்சித்து வருகிறது. ஈரான் அணு குண்டுகளை தயாரித்து வருவதாகவும் அதனால் உலகின் பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், உலகிலேயே மிக அதிகளவிலான பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா இடைவிடாமல் கூப்பாடு போட்டுவருகிறது. ஆனால், அணுசக்தியை தனது நாட்டின் மின் தேவை உள்ளிட்ட ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தவே ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருப்பதாக ஈரான் கூறிவருகிறது. கடந்த வாரம் மூன்று அணு உலைகளையும் ஈரான் ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்.

ஏற்கெனவே ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதான காரணத்தைக் கூறி, தனது உலகளாவிய ஊடகங்களைக் கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டு, அந்நாட்டைத் தாக்கி அழித்து, 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களைக் கொன்று குவித்து, அந்நாட்டின் ஜனாதிபதி சதாம் உசேனையும் தூக்கிலிட்டு படுகொலை செய்தது அமெரிக்கா. அதேபோல லிபியாவிலும் பேரழிவை ஏற்படுத்தி அந்நாட்டின் ஜனாதிபதி முஅம்மர் கடாபியைப் படுகொலை செய்தது.

மீள முடியாத முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியில் அமெரிக்கா சிக்கித்தவிக்கிறது. தனது பொருளாதாரம் மேலும் மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுத்து நிறுத்த எண்ணெய் வளம் கொண்ட லிபியாவைத் தாக்கி கைப்பற்றிய அமெரிக்க நிர்வாகம், அடுத்து ஈரானுக்கு குறிவைத்துள்ளது. நீண்ட காலமாகவே ஈரானின் அணுசக்தி திட்டங்களை அமெரிக்கா திட்டமிட்டு விமர்சித்து வருகிறது. ஈரான் அணு குண்டுகளை தயாரித்து வருவதாகவும் அதனால் உலகின் பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், உலகிலேயே மிக அதிகளவிலான பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா இடைவிடாமல் கூப்பாடு போட்டுவருகிற...

சிரியாவுக்கும் அமெரிக்கா குறி வைத்துள்ளது.

இத்தகைய சூழலில், ஈரான் மீது எந்த நேரமும் தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அமெரிக்க இராணுவம் மேற்கொண்டிருக்கிறது. இதற்காக ஈரானின் கடல் எல்லையில் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் முற்றுகையிட்டுள்ளன. இதனால் அப்பிரதேசம் முழுவதிலும் போர்மேகம் சூழ்ந்துள்ளது.

இது உலகின் அமைதிக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது. இச்சூழலை தடுத்து நிறுத்த ஆசியாவின் மிகப்பெரும் நாடுகளான ரஷ்யா-சீனா-இந்தியா ஆகியவை ராஜதந்திர ரீதியாக தலையீடு செய்ய வேண்டும் என, உலகின் பல்வேறு அறிஞர்களும் அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே ரஷ்ய இராணுவத் தளபதியின் எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

பாரசீக வளைகுடாவில் அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் இராணுவ முற்றுகை, எந்த நேரத்திலும் இப்பிராந்தியம் முழுவதிலுமே பெரும் மோதலை தூண்டிவிடக்கூடும் என்று ரஷ்யாவின் கப்பல் படைத் தளபதி அட்மிரல் விளாடிமிர் கோமோயதவ்வும் எச்சரித்துள்ளார்.

ரஷ்யா நாடாளுமன்றமான டூமாவின் பாதுகாப்புக்குழுவின் தலைவராக செயல்படும் அட்மிரல் விளாடிமிர், எந்த நேரத்திலும் ஈரானை அமெரிக்கா தாக்கக்கூடும் என்று தெரிவித்தார். அப்பிராந்தியம் முழுவதிலும் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க போர்க்கப்பல்களிலிருந்து ஒரே நேரத்தில் 450 பேரழிவு ஏவுகணைகளை ஈரான் மீது ஏவி தாக்குதலைத் துவக்க அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாரசீக வளைகுடாவில் தொடங்கும் இந்த மோதல், காகசஸ் பிரதேசம் முழுவதிலும் பரவக்கூடும் என்றும் ரஷ்யா கவலை தெரிவித்துள்ளது. நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், ரஷ்யாவை ஒட்டியுள்ள பிரதேசத்தில் நிலைமை மோசமடைந்து செல்லுமானால், எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு ரஷ்ய இராணுவம் தயாராக இருப்பதாகவும் இராணுவத்தளபதி ஜெனரல் மக்கரோவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காகசஸ் பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஆர்மேனியா, தெற்கு ஒசெட்டியா மற்றும் அப்காசியா ஆகிய இடங்களில் உள்ள ரஷ்ய இராணுவ தளங்கள் முழுமையான தயார் நிலையில் இருப்பதாக ரஷ்ய இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துருக்கியில் அமைந்துள்ள நேட்டோ இராணுவ தளத்திலிருந்தும் ஈரான் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை நடத்தக்கூடும் என்றும், தனது போரில் ஜோர்ஜியாவையும் அஜர்பெய்ஜானையும் அமெரிக்கா இழுக்கக்கூடும் என்றும் ரஷ்ய இராணுவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வாரத்தில், அஜர்பெய்ஜானை மையமாகக் கொண்டு ஈரானுக்கு எதிராக இஸ்ரேலிய உளவாளிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன என்று ஈரான் அரசு குற்றம் சாட்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமையையும் ரஷ்ய அரசு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே, ஜோர்ஜியாவை ஒட்டி கருங் கடல் பகுதியில் ரஷ்யா தனது போர்க்கப்பல்களை நிறுத்தியுள்ளது. அஜர்பெய்ஜானின் துறைமுக நகரங்கள் உள்ள கடல் பகுதிகளிலும் ரஷ்யா தனது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

நன்றி சூத்திரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபத்தானவர்கள்

77

ராபின்சனை விட அதிக மாக பயப்பட வேண்டிய எதிரி அவன்தான் என்பது அவருக்குத் தெரியும்.

டேவிட் அங்கிருந்து படிக் கட்டுகளில் இறங்கிச் சென்ற போது, எதிரில் ஜான்ஸன் நிற்பதைக் கவனித்தான்.

"இந்தக் கப்பலுக்குள் என்ன நடக்கிறது?" ஜான்ஸன் கேட்டான்.

"நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது!" டேவிட் பதிலளித்தான்.

"என்ன நடந்தது?" என்று கேட்டவாறே ஜான்ஸன் தனது அறைக் கதவைத் திறந்தான்.

டேவிட் உள்ளே நுழைந்ததும் ஜான்ஸன் கதவை மூடித் தாழிட்டான்.

"இந்தக் கப்பலின் நமக்கு உதவ வேண்டியவன் எதிரா-ளிகளுடன் சேர்ந்துவிட்டான்!"

"அப்படியென்றால்..."

"இந்தக் கப்பலில் மர்மமாக என்னவெல்லாமோ நடக்கிறது. அதுவும் நமக்கு எதிராக. இந்தக் கப்பலின் கப்டனே நமக்கு எதிராளி தான்!"

ஜான்ஸன் அந்தக் கேட்ட பிறகு மெளன-மாக அறைக்குள் அங்கும் இங்குமாக உலாவினான். அவன் முகத்தில் பல்வேறு உணர்வுகள் மின்னி மறைந்தன. அந்தக் கண்களில் ஒரு சிறுத்தையின் சீற்றம் இருந்தது.

"நமது சொற்படி நடக்க வேண்டியதுதான் அந்த கப்டனின் வேலை. மாறாக அவர் விருப்பப்படி நடப்பதற்கு அல்ல. ஆமாம், அந்தக் கப்டன் எந்த நாட்டவர்?"

"கனடாக்காரர். ஏற்கனவே ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்து தப்பித்திருப்பவர்."

இதைக் கேட்ட டேவிட் திடுக்கிட்டான். அவன் சந்தேகத்துடன் ஜான்ஸனைப் பார்த்தான்.

"இல்லை. நீங்கள் சொல்வது தவறு. அதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை."

"அப்படியென்றால்..." ஜான்ஸன் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

"இந்தக் கப்பலின் கப்டனை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா?"

"ஆமாம். நான்கு வருடங்களுக்கு முன்பு நாங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்து பியர் குடித்தோம்."

"அதற்குப் பிறகு?"

"பார்க்கவில்லை."

"அப்படியானால் தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் கப்ப லின் தற்போதைய கப்டன் ஓர் இந்தியன். வங்காளி போல் தென்படுகிறான். நன் றாக ஆங்கிலம் பேசுகிறான்."

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஜான்ஸன் சட்டென்று நின்றான். அவன் டேவிட்டையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், நான் கப்டனை உடனடியாகப் பார்க்க வேண்டும்."

"நானும் உங்களுடன் வருகிறேன். அந்தக் கப்டன் நிச்சயமாக நீங்கள் கருதும் மனிதர் அல்ல என்று எனக்குத் திடமாகத் தெரியும்."

இருவரும் அறைக்கு வெளியே வந்தார்கள். ஜான்ஸன் கதவை மூடிப் பூட்டிவிட்டு டேவிட்டுடன் விரைவாக நடக்கத் தொடங்கினான். இருவரும் படிகளில் ஏறி அவசர அவசரமாக கப்டனின் அறையை நெருங்கினர்.

கப்டனின் அறைக் கதவை ஜான்ஸன் தட்டினான்.

கதவைத் திறந்தவர் புஷ்பராஜ்.

ஆனால், அப்போது அவரது வேடம் வித்தியாச மாக இருந்தது. அங்கிங்காக நரைத்த தாடி. கண்டபடி கலைந்து கிடந்து காது வரை இறங்கியுள்ள தலைமுடி. தொளதொளப்பான கோட். சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க தோற்றம்.

"நீங்கள் யார்?" ஜான்ஸன் கேட்டான்.

"டாக்டர் ஷெரீப். கப்டன் உடல் நலமில்லாமல் கிடக்கிறார். உள்ளே வாருங்கள்..." புஷ்பராஜ் அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்.

இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.

"எங்கே இருக்கிறார் கப்டன்?" ஜான்ஸன் அந்த அறையைக் கண்களால் துழாவியபடி கேட்டான்.

"வாருங்கள் காட்டுகிறேன்... உட்புற அறையில் இருக்கிறார்" என்றபடி புஷ்பராஜ் நடந்தார். மற்ற இருவரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

புஷ்பராஜ் அந்த அறை விளக்கின் சுவிட்சை அழுத்தினார். விளக்கு எரிந்தது. கட்டிலில் கப்டன் படுத்துக் கிடந்தார்.

"அவருக்கு உடல் நலம் சரியில்லை. சுயநினைவிழந்து படுத்திருக்கிறார். நான் மருந்து கொடுத்திருக்கிறேன்." என்ற புஷ்பராஜ் தன் கழுத்தில் கிடந்த ஸ்டெதஸ் கோப்பை வருடியபடி பேசினார்.

"நீங்கள் இங்கு வரும் போது வேறு எவராவது இருந்தார்களா? ஜான்ஸன் கேட்டான்.

"ஆமாம்... ஒருவர் இருந் தார். என்ன காரணத்தாலோ நான் வந்தவுடன் அவர் வெளியே போய்விட்டார்." புஷ்பராஜ் இயல்பான குரலில் பேசினார்.

"யார் அவர்?" ஜான்ஸன்.

"எனக்குத் தெரியாது! ஒரு வேளை துணை கப்டனாக இருக்கலாம்.

"அதற்கு வாய்ப்பு இல்லை. எந்த ஓர் இந்திய ரும் இந்தக் கப்பலில் வேலைக்கு அமர்த்தப்பட வில்லை என்று எனக்கு உறுதியாகத் தெரியும்."

"இருக்கலாம். கப்டனுக்கு உடல் நலம் சரியில்லாத போது அவருக்கு உதவ யாராவது வந்திருக்கலாம்."

ஜான்ஸன் அந்த அறை வாசலையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"எதற்கும் கப்டன் கண் விழிப்பது வரை நாம் இங்கேயே காத்திருப்போம்." டேவிட் கூறினான்.

"ஆமாம். எப்படியும் அந்த மனிதர் இங்கு வராமல் இருக்க முடியாதே." என்ற ஜான்ஸன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

**தொடரும்**

# நடுக்கடல் தாக்குதல் நடந்தது என்ன?

**கேரளக் கரையில்** இருந்து 40 கடல் மைல் தொலைவில் இத்தாலியக் கப்பல் இந்திய மீனவர்களை சுட்ட சம்பவம், இரு நாடுகளின் இராஜதந்திர மட்டத்தை எட்டியுள்ளது.

இத்தாலியக் கப்பல் கொச்சி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டு நங்கூரமிடப்பட்டு உள்ளது. கப்பல் கேப்டனும் மாலுமிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசு, இத்தாலிய அரசிடம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் இரு இந்திய மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இத்தாலிய மாலுமிகள் மீது, இந்திய குற்றவியல் சட்டப்படி, கொலைக் குற்றம் சுமத்தப்படலாம் என்று தெரிகிறது.

இதில் சம்பந்தப்பட்ட இத்தாலியக் கப்பல் இத்தாலிய கடற்படைக் கப்பல் அல்ல. வர்த்தக எண்ணெய்க் கப்பல். பெயர் என்ரிக்கா லெக்சி. பொதுவாக வர்த்தகக் கப்பல் மாலுமிகளிடம் துப்பாக்கிகள் இருப்பது வழக்க மில்லை. ஆனால், சமீபகாலமாக கடல் கொள்ளையரின் நடமாட்டங்கள் அதிகமாக இருப்பதால், இத்தாலிய அரசு, தமது நாட்டுக் கப்பல்களில் மாலுமிகளாகச் செல்வதற்கு கடற்படையினரை அனுமதிக்கிறது. அவர்களிடம் துப்பாக்கி உண்டு.

கொல்லம் மாவட்டம் நீண்டக்கரா துறைமுகப் பகுதியில் இருந்து புறப்பட்டுச் சென்ற மீன்பிடிப் படகில் இருந்தவர்களே சுடப்பட்டவர்கள். 'செயின்ட் ஆன்டனிஸ்' என்ற பெய ருடைய அந்த மீன்பிடிப் படகு கடந்த 8ஆம் திகதி 11 மீனவர்களுடன் அர பிக்கடலில் மீன்பிடிக்கச் சென்றது. கேரளக் கரையிலிருந்து 40 கடல் மைல்கள் தொலைவில், மாலை 4.30 மணியளவில் இந்தப் படகு இருந்த இடத்தை இத்தாலிய டேங்கர் கப்பல் கடந்தது.

அப்போதுதான் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. படகில் இருந்த 11 பேரில் 9 பேர் தூங்கிக் கொண்டிருந் தனர். விழித்திருந்த இருவரும் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டு விழித்த மீனவர்கள் தங்களது மொபைல் போன் மூலமாக, அருகே இருந்த பிற மீனவர்களுக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் அங்கிருந்து நீண்டக்கரா துறைமுகத்திற்கு தகவல் கொடுத்தனர். இதன் பின்னரே கடலோரக் காவல் படைக்கு தகவல் அனுப்பப்பட்டது. கடலோர காவல் படை உடனடியாக, லட்சுமி பாய், சுமர் என்ற இரு வேகப் படகுகளை அந்த இடத்துக்கு அனுப்பியது.

இதற்கிடையே இந்தியக் கடற் படைக்கும் தகவல் கிடைக்கவே, அவர்கள் தமது தரப்பில் இருந்து ஐ.என்.எஸ்., கப்ரா என்ற கப்பலையும், கடற்படை ஹெலிகொப்டர் ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இத்தாலி யக் கப்பல், தொடர்ந்தும் நகர்ந்து கொண்டு இருந்தது. கடலோரக் காவல் படையினர் தமது ரேடியோ மூலம் தொடர்பு கொண்டு கப்பலை நிறுத்துமாறு கூறியும் கப்பல் தொடர்ந்து பயணித்தபடி இருந்தது. கடற்படைக் கப்பலும், ஹெலிகொப்ட ரும் ஸ்தலத்துக்கு வந்த பின்னர்தான் கப்டன் கப்பலை நிறுத்தினார்.

விசாரணையின்போது, கடல் கொள்ளையரின் படகு என்று நினைத்தே மீனவர் படகுமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கப்பலில் இருந்த இத்தாலியக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்தியக் கடற்படையின் தெற்கு மண்டல தளபதி கே.என்.சுஷில் அதை ஏற்க மறுக் கிறார். "கடல் கொள்ளையர் என்று நினைத்திருந்தால், முதலில் எச்ச ரிக்கை வேட்டுக்களை வெடித்திருக்க வேண்டும் (வானத்தை நோக்கி சுடுதல்) அத்துடன், சம்பவம் நடை பெற்ற இடம் இந்தியக் கரையில் இருந்து வெறும் 40 கடல் மைல் தொலைவில் இருப்பதால், கடல் கொள்ளையரைக் கண்டால் எமக்கு உடனே தகவல் தெரிவித்திருக்க வேண்டும். இவர்கள் இந்த இரண்டை யுமே செய்யவில்லை. துப்பாக்கி யால் சுட்டுவிட்டு, சென்று கொண்டி ருந்தார்கள்" என்கிறார் அவர்.

கடைசியாகக் கிடைத்த தகவலின் படி, மாலுமிகளை தடுத்து வைத்துக் கொண்டு கப்பலை விட்டுவிடுவார்கள் என்று கூறப்படுகிறது.

**நன்றி : இணையம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைகள் உண்மைக்காகவா ஊருக்காகவா?

அலசுவது
மதியூகி

**அமெரிக்கா மனித உரிமை மீறல் தொடர்பாகவும் போர்க்குற்றம் தொடர்பாகவும் இலங்கை தொடர்பாக உண்மையில் அக்கறை கொண்டிருந்தால் மூன்று தசாப்த காலத்தில் நடந்த பல சம்பவங்கள் இருக்கின்றன. இதை வெறுமனவே யுத்தத்தின் இறுதி கால கட்டத்தில் மட்டும் நடந்த சம்பவமாக இவற்றை எடுத்துக் கொள்ளமுடியாது. இங்கே கூட்டமைப்பு தம்மையும் ஏமாற்றிக் கொண்டு தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு மிகச் சுருக்கமான விடயத்தைக் கூறுவதானால் அமெரிக்காவோ வேறு சர்வதேச சமூகமோ இலங்கை அரசு மீது கூறும் குற்றச்சாட்டுக்கள் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களுமே தவிர தமிழ் மக்களின் அரசியல் விவகாரமோ அல்லது ஒரு இனத்தின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற குரல்கொடுப்போ இல்லை.**

சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை தலை சாய்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது. பொறுப்புச் சொல்லும் தனது பொறுப்பிலிருந்து இறைமையுள்ள அரசு என்று கூறும் ஒரு நாடு நழுவிச் செல்ல முடியாது. இலங்கையின் தற்போதைய நிலைமையும் இதுதான்.

என்றாலும் சீனாவும் இந்தியாவும் ஆதரவாக இருந்தாலும் உலகத்தோடு ஒத்துப்போகவேண்டிய தேவையை தொடர்ந்தும் நிராகரிக்க முடியாது. ஐ.நா சபையில் காலத்துக்குக் காலம் எழும் குற்றச்சாட்டுக்களுக்கு தற்காலிக சமரசங்களை தொடர்ந்தும் தீர்வாக கொள்ளமுடியாது.

இம்மாதம் 27ஆம் திகதி ஐ.நா சபையின் மனித உரிமை கவுன்சில் (UNHCR) தனது 19ஆவது கூட்டத் தொடரை நடத்தவுள்ளது. அந்த வேளையில் போரின் இறுதித் தருணங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் போன்றவற்றை நம்பகமானதும் சுதந்திரமானதுமான பொறிமுறையொன்றின் மூலம் விசாரணை செய்து உண்மையை வெளியில் கொண்டுவருவதும், பொறுப்புச் சொல்லும் தனது கடமையை அல்லது தனது வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதும் முக்கியமானவை என்ற அடிப்படையை ஏற்கச் செய்யும் அழுத்தம் ஒன்றை ஆதரிப்பதற்கு அமெரிக்கா தலைமையிலான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக அமெரிக்கா மிகவும் சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகின்றது. இதை இலங்கைக்கும் இலங்கையின் ஆதரவுச் சக்திகளுக்கும் வெளிக்காட்டும் விதமாகவே கடந்த வாரங்களில் அமெரிக்காவின் முக்கிய அதிகாரிகள் மூவரின் விஜயங்கள் அமைந்திருந்தன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பான பிரிவில் சிறப்பு தூதுவராக இருக்கும் ஸ்ரீபன் ரொப், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பொது மக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கீழ்நிலைச் செயலாளராக இருக்கும் மரியா ஒரேரா மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்திற்கான உதவிச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் ஆகியோரே அண்மையில் இலங்கை வந்து சென்றவர்களாவர்.

இவர்களின் வருகை இலங்கை அரசுக்கு எச்சரிக்கை உணர்வையே ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவை தடுத்து நிறுத்த முடியாத போதும் தற்காப்பு நடவடிக்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டிய தேவையை இலங்கை அரசு உணர்ந்துள்ளது.

கடந்த புதன் கிழமை இராணுவத் தளபதியை மேற்கோள்காட்டி வெளியாகிய செய்திக் குறிப்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக இராணுவ நீதிமன்றம் ஒன்றை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு இலங்கையில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அதாவது இதுநாள்வரை இலங்கையில் எவ்விதமான போர்க்குற்றங்களும் இடம் பெறவில்லை என்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு ஒரு போதும் தலைசாய்க்கப்போவதில்லை என்றெல்லாம் கூறிவந்த இலங்கையின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் இந்த அறிவிப்பு எதிர்பார்த்த அளவுக்கு சர்வதேசத்தைத் திருப்தியடையச் செய்யவில்லை. இதற்குக் காரணம் கடந்த காலத்தில் இலங்கை சார்பில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றவில்லை. அத்தோடு போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கேள்விகளுக்கு இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் திருப்தி கொள்ளமுடியவில்லை. சர்வதேசத்தின் முக்கியமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு தொட்டுக்கூட பார்க்கவில்லை என்றே கூறிவரும் சர்வதேசம் குறைந்தபட்சம் தானே அமைத்துக் கொண்ட ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள இன ஐக்கியத்துக்கான அம்சங்களைக்கூட முழுமனதோடு நடைமுறைப்படுத்தத் தயாரில்லை என்று குற்றம் சாட்டிவருகின்றது.

இந்த நிலையில் போர்க்குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் இராணுவ நீதிமன்றம் அமைத்துள்ளதாகவும் இராணுவ நீதிமன்றம் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் கூறப்பட்டுள்ள அவதானிப்புக்கள் குறித்து விசாரிக்கும் என்று தெரிவித்துள்ளதே தவிர போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலோ மனித உரிமை மீறல்கள் தொடர்பிலோ இராணுவ நீதிமன்றம் என்ன செய்யப் போகின்றது என்பதையிட்டு ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா கொதித்துப்போயுள்ளது.

இலங்கையின் இந்த அறிவிப்பு போரின் இறுதிக்கால கட்டத்தில் என்ன நடந்தது என்ற கேள்விகளுக்கு உண்மையைக் கண்டுபிடித்து உலகத்துக்கு முன்னால் தன்னை நியாயவாதிகளாக நிறுத்துவதற்காகவா அல்லது இம்மாதம் ஐ.நா சபையில் நடைபெறவிருக்கும் கூட்டத் தொடரில் எழக்கூடிய நெருக்கடியைச் சமாளிக்க உலகுக்கு சமிக்ஞை காட்டும் யுக்தியா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவே தெரிகின்றது.

இதற்கிடையே இலங்கையின் தற்போதைய நெருக்கடியான சூழலை தமது அரசியலுக்குக் கிடைத்த வெற்றியாக தமிழ் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு கூறுகின்றது.

கூட்டமைப்பை உலக நாடுகள் கவனிக்கத் தொடங்கியிருக்கின்றன. கூட்டமைப்பை அரசுடன் தொடர்ந்து பேசும்படியும் கூறுகின்றன.

இதற்குக் காரணம் கூட்டமைப்பு நினைப்பதுபோல் சர்வதேச சமூகத்துக்கு கூட்டமைப்பு மீதான காதல் ஒன்றுமில்லை. இலங்கையை தமது வழிக்குக் கொண்டுவர இருக்கக்கூடிய எல்லா யுக்திகளையும் பயன்படுத்தும் முயற்சியில் அரசுக்கு தலையிடியாக இருக்கும் கூட்டமைப்பையும் பயன்படுத்திக் கொள்கின்றன.

வேறு சக்திகளை விடவும் கூட்டமைப்பை அரசுக்கு எதிரான களத்தில் இறக்கி விட்டால் அதனால் பாதிப்புக்களை எதிர்கொள்பவர்கள் தமிழர்களாகவே இருப்பர். அதைக் கூட கூட்டமைப்பு அரசியல் என்று தமிழ் மக்களை பேக்காட்டி விடும் என்பது உலக நாடுகளுக்குத் தெரியும். அமெரிக்கா மனித உரிமை மீறல் தொடர்பாகவும் போர்க்குற்றம் தொடர்பாகவும் இலங்கை தொடர்பாக உண்மையில் அக்கறை கொண்டிருந்தால் மூன்று தசாப்த காலத்தில் நடந்த பல சம்பவங்கள் இருக்கின்றன. இதை வெறுமனவே யுத்தத்தின் இறுதி கால கட்டத்தில் மட்டும் நடந்த சம்பவமாக இவற்றை எடுத்துக் கொள்ளமுடியாது.

இங்கே கூட்டமைப்பு தம்மையும் ஏமாற்றிக் கொண்டு தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு மிகச் சுருக்கமான விடயத்தைக் கூறுவதானால் அமெரிக்காவோ வேறு சர்வதேச சமூகமோ இலங்கை அரசு மீது கூறும் குற்றச்சாட்டுக்கள் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களுமே தவிர தமிழ் மக்களின் அரசியல் விவகாரமோ அல்லது ஒரு இனத்தின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற குரல்கொடுப்போ இல்லை.

முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப்போடும் கூட்டமைப்பின் இந்த அரசியல் விதைப்பை தமிழ் மக்கள் மீண்டும் இழப்புக்களோடு அறுவடை செய்யவேண்டியதாக இருக்குமோ என்பதுதான் விடயங்களை பகுத்தாய்வு செய்வோரின் கவலையாகவுள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தளிக்கும் வேடுவ சமூகம்!

## எதிர்பார்ப்புக்களோடும் ஏமாற்றங்களோடும்



[illegible]

"எல்லோரும் வருகிறார்கள். [illegible] பற்றிய விபரங்களைக் கேட்கிறார்கள். ஆனால், ஒரு விதமான உதவியும் இல்லை. சோறுக்கு வழியில்லை. கையில் காசு இல்லை. தண்ணியும் இல்லை. [illegible]. முன்பு நாங்கள் சேனையன் குளம் காட்டிலேதான் இருந்தோம். இந்தியன் இராணுவம் வந்து எங்களை நாட்டை விட்டு வெளியேற்றினார்கள். நாங்கள் வந்து ஊர் மக்களோடு சேர்ந்து இருக்கிறோம்." என்கிறார் பத்தன் கதிர்காமர் எனும் 80 வயதான மூத்த வேடுவர்.

பரந்து விரிந்து கிடக்கும் மட்டக்களப்பு வாவிகளையும் காடுகளில் நாகரிக மனிதர்களின் தொல்லைகளின்றி சுதந்திரமாக இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்த வேடுவ சமுதாயத்தினை இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த ஆயுத வன்முறைகள் ஆட்டங்காணச் செய்து விட்டிருந்தன.

இவர்களது [illegible] வாழ்விடமான [illegible] பகுதிகளில் இருந்தும் அவர்கள் விரட்டியடிப்பட்டதற்கு பிரதான காரணங்கள் [illegible] நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

வாகரையின் கதிரவெளியில் ஓர் ஒதுக்குப்புற மூலை இவர்களுக்கு உயிர் வாழும் ஓர் இடமாக வழங்கப்பட்டது. இவர்களது குடியிருப்புகளின் ஒரு பகுதியில் [illegible] அதன் அருகே அந்தத்தில் [illegible] அமைந்திருக்கிறது.

[illegible] மீள் குடியிருக்கும் ஒரு நாவல் மரத்தினையில் தமது வேடுவ இனத்தோடு குந்திக் கொண்டிருக்கிறார் தற்போது எஞ்சியிருக்கும் வேடுவ சமூகத்தின் வயோதிபரான கதிர்காமர். வனத்தில் இருக்கும் போது தேன் எடுக்கச் சென்ற வேளையில் கரடியுடன் மூர்க்கத்தனமாக மோதி அந்தக் கரடியைத் தோற்கடித்தாலும் கூட நிரந்தரமாக தனக்கு ஒரு கால் பலவீனப்பட்டுப்போனதை நினைத்து அவர் வருத்தப்பட்டதை விட, தற்போது தாங்கள் வாழும் துரதிரஷ்ட நிலையை எண்ணியே அவர் மாறாக் கவலை கொண்டுள்ளார்.

"இல்லாட்டி நாங்கள் உடும்பும் பன்றியும், தேனும், மீனும் உக்குளானும் இப்படித்தான் எங்கள் சீவியம் நடந்து வந்தது. பயிர்கள் நாட்டினோம். காய்கறிகள் விளைவித்தோம். இந்திய இராணுவம் எழும்பச் சொன்னதாலதான் நாங்கள் இப்ப ஊரோட, ஊர் மக்களோட வந்து சேர்ந்து இருக்கிறம். இங்க வந்த பிறகு இப்ப ஊருக்கு ஊர் போய் பிச்சை எடுக்கிறது. என்னால இனி ஏலாது இல்லாட்டி நான் வனத்திற்கு போய்விடுவேன். எங்களது சமூகப் பெண்கள், இவர்கள் வளத்துப் பிச்சை எடுப்பது, வயல்களில் நெற்கதிர் பொறுக்குவது அந்த நெல்லைக் கொண்டு வந்து அரிசி குற்றி சோறு சமைத்துச் சாப்பிடுவது. இப்படித் தான் எங்களது காலம் கழிகிறது.

"பிள்ளைகள் எல்லாரும் பள்ளிக்குப் போகிறார்கள். இன்றும் விளையாட்டுப் போட்டிக்குப் போய் இருக்கின்றார்கள்.

காட்டில் சீவிக்கும் பொழுது பயிர்கள் வளர்த்து, தேன் எடுத்து உண்டு எமது சீவியம் போனது. இப்பவுள்ள எமது இளம் தலைமுறையினருக்கு காட்டுத் தொழில் தெரியாது.

இவர் வேதத்திற்குப் போனதால வேதக்காரர்கள் இவருக்கு இந்த வீட்டைக் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்" என்று எதிரே அமர் [illegible]யாக இருந்த ஒரு கல் வீட்டைக் காட்டினார். "அதிலேதான் [illegible] தன்மையும் அதது பலவீனமும் நிம்மதியாகக் கால் நீட்டித் தூங்க ஒரு வீடு இல்லை என்ற ஏக்கத்துடனும் அவர் வெளியிட்டார். சமுர்த்தி முத்திரை இல்லை. தொழிலில்லை காசுமில்லை. உடுப்பு கொள்வனவு வாங்க வழியில்லை. அரசாங்கத்தினால் எனக்குப் பிச்சைச் சம்பளம் 300 ரூபா மட்டும் கிடைக்கிறது" என்றார் அவர்.

30 வயதான பொன்னையா தங்கராஜாவை பிரதான சமூக நீரோட்டத்தோடு கலந்து சமூக மயப்படுத்தப்பட்டு ஆச்சரியமாகச் சிந்திக்கும் ஒருத்தராகக் காணமுடிந்தது.

"வனத்தில் இருந்து விட்டு ஊருக்குள் வந்ததால் இப்ப தொழில் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. கூலித்தொழில், கூலி வேலை, வெள்ளாமை செய்பவர், விவசாயக் கூலி வேலைக்குப் போகலாம். முதல் காட்டில் வாழ்ந்த நிலைமைக்கும் இப்ப உள்ளதிற்கும் நிறைய வேறுபாடு. பிள்ளைகள் எல்லோரும் பாடசாலைக்குப் போகின்றார்கள். நாங்கள் படிக்கவில்லை. எங்களது பிள்ளைகள் படிக்கிறார்கள் அது எங்களுக்குப் பெருமையாக உள்ளது. பிள்ளைகள் முன்னேற வேண்டும்.

முன்னரைப்போல விருப்பப்படி காட்டில் போய் தேன் எடுக்க முடியாது. காட்டு விலங்குகளை வேட்டையாட முடியாது. இனிமேல் என்ன வரலாம் கொண்டு காட்டு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது.

இந்த சமூகத்தை இன்னும் முன்னேற்றுவதாக இருந்தால் ஆடு வளர்க்க [illegible] உதவிகளும், [illegible] தோட்டம் செய்ய [illegible] குடியவர்களுக்கு பயிர் விதைகளும், விவசாய உபகரணங்களும் தந்தால் அதனைக் கொண்டு நாங்கள் முன்னேறலாம். இப்போது எங்களுக்கு எல்லாத் தொழிலும் தெரியும்.

ஆனால் இதற்கான எதுவித வசதிகளும் எங்களிடம் இல்லை. எங்களை ஆதரிக்கும் பெரிய சமூகத்தவர்களின் வீடுகளுக்குத்தான் தண்ணீர் எடுக்கச் செல்கின்றோம். வீடு அரைகுறையாகக் கிடக்கிறது. கொஞ்சம் காசு [illegible] அவர்கள் தந்த காசுக்கு வீட்டைக் கட்ட எழுப்பினோம். மேல் மிச்சமாகப் போட்டு வீட்டை நிறைவு செய்ய எங்களிடம் வழியில்லை. (தொடர்ச்சி [illegible] பக்கம்)

---

"

கடந்த கால ஆயுத வன்முறைகளினால் நகரப்பகுதிகளைவிட கிராம மக்களே மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்திருந்தார்கள். ஏனென்றால் யுத்தமும் ஆயுத வன்முறைகளையும் பிரயோகிக்கும் களங்களாக வன்மை வாதிகள் கிராமப்புறங்களையும் கிராம மக்களையுமே பயன்படுத்தி இருந்தார்கள். ஆகையினால் கிராமங்களில்தான் வன்முறைகள் மையம் கொண்டிருந்தன.

ஆயுதங்களைக் கையிலெடுத்திருந்த எல்லாத் தரப்பினரதும் அட்டூழியங்களுக்கு கிராம மக்களும் அவர்களது சொத்துக்களுமே இலக்காக ஆக்கப்பட்டிருந்தது.

உள்ளூரில் காய்ச்சப்படும் வடிசாராயம் மற்றும் சட்ட பூர்வமான மதுசாரங்கள்தான் தங்களதும் தங்களது எதிர்கால சந்ததிகளினதும் வாழ்வில் மண்ணை வாரியிறைத்திருப்பதாக பாதிக்கப்பட்டுத் துயரத்துடனே தமது வாழ் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் பெண்கள் கதறுகிறார்கள்.

"

# சமூகச் சீரழிவுகளுக்கு வித்திடும் போதையும் அறியாமையும்!

வாகரை வாணி

ஒரு விதவையின் வாழ்வுக்காக இந்த ஊரிலுள்ள பல நூறு குடும்பங்கள் கண்ணீர் சிந்தலாமா ? என்று கண்ணீர் மல்கக் கேட்கின்றார்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலங்கரச்சை மற்றும் தியாவட்டவான் கிராமங்களிலுள்ள பெண்கள்.

இந்தக் கேள்வியை மேற்குறிப்பிட்ட கிராமப் பெண்கள் மாத்திரமல்ல மது போதையால் சீரழிந்த குடும்பங்களைச் சேர்ந்த அத்தனை பெண்களும்தான் தமது ஆற்றாமை கலந்த துயரத்துடன் கேட்கின்றார்கள்.

கிராமங்களுக்குள் போய் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பட்டியலிடுங்கள் என்று கேட்டால் தாங்கள் எதிர்கொள்ளும் ஏராளமான பிரச்சினைகளுக்குள் முதலாவதாக மதுப்பாவினையையே அவர்கள் குறித்துக் காட்டுகின்றார்கள். இது வடக்கு கிழக்கின் எல்லாக் கிராமங்களிலும் உள்ள சம கால நிலைமைதான்.

யுத்தம் நடந்த வேளையிலும் தற்போதைய யுத்தமில்லாத அமைதிச் சூழ்நிலையிலும் கூட மது போதைதான் தங்களையும் தங்களது குடும்பத்தினரையும் வாட்டி வதைக்கிறது என்பது அவர்களது அபிப்பிராயம்.

குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்ட தனது தந்தையின் கொடுமை காரணமாக தனது தாய் 60 வயதில் தன் கண்முன்னாலேயே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டதையும், அதனைத் தொடர்ந்து குற்ற உணர்வு மேலீட்டால் தனது தந்தையும் தாய் இறந்து 11ஆவது நாளில் கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டதையும் தனது வாழ்க்கையில் இடம்பெற்ற மாறாத துன்பியல் நிகழ்வாகக் கூறி கண் கலங்கினார் கிறிஸ்தியன் மேரி.

கடந்த கால ஆயுத வன்முறைகளினால் நகரப்பகுதிகளைவிட கிராம மக்களே மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்திருந்தார்கள். ஏனென்றால் யுத்தமும் ஆயுத வன்முறைகளையும் பிரயோகிக்கும் களங்களாக வன்மை வாதிகள் கிராமப் புறங்களையும் கிராம மக்களையுமே பயன்படுத்தியிருந்தார்கள். ஆகையினால் கிராமங்களில்தான் வன்முறைகள் மையம் கொண்டிருந்தன.

ஆயுதங்களைக் கையிலெடுத்திருந்த எல்லாத் தரப்பினரதும் அட்டூழியங்களுக்கு கிராம மக்களும் அவர்களது சொத்துக்களுமே இலக்காக ஆக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்தக் கொடூர வன்முறைகள் ஏற்படுத்திய உயிர் உடைமை அழிவுகளை விட மெல்லக் கொல்லும் மதுபோதையால் விளைந்த நாச கேடுகள் அப்போதும் இப்போதும் முன்னணியில் இருந்து வந்திருக்கின்றது.

உள்ளூரில் காய்ச்சப்படும் வடிசாராயம் மற்றும் சட்டபூர்வமான மதுசாரங்கள்தான் தங்களதும் தங்களது எதிர்கால சந்ததிகளினதும் வாழ்வில் மண்ணை வாரியிறைத்திருப்பதாக பாதிக்கப்பட்டுத் துயரத்துடனே தமது வாழ் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் பெண்கள் கதறுகிறார்கள்.

வசதி படைத்த வர்க்கத்தினர் திட்டமிட்டுத்தான் கிராமத்து மக்களை இவ்வாறு சீரழிக்கிறார்கள் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் ஆற்றாமை கலந்த அழுகையாக வெளிப்படுகிறது.

என்ன செய்தாவது ஊரில் இடம் பெறும் மதுப்பாவினையை நிறுத்த வழிகாணுங்கள் உங்களுக்குக் கோடி புண்ணியமும் தெய்வ அனுக்கிரகமும் கிடைக்கும் என்ற அவர்களது அழுகுரல் இலேசில் புறந்தள்ளி விடக்கூடியதல்ல.

முதலில் நேரடியாக வீட்டிலுள்ள பெண்களையும் பின்னர் ஒட்டு மொத்தமாக முழுக்குடும்பத்தையும் சமகாலத்திலுள்ள எல்லோரையும் பின்னர் எதிர்கால சந்ததியையும் அழித்தொழிக்கும் இந்த இழி தொழிலை யார்? ஏன் செய்கின்றார்கள் என்று ஆராய்ந்தால் அங்கும் பல மர்மங்கள் துலங்குகின்றன.

யுத்தத்தின் காரணமாக விதவைப் பெண்களின் தொகை அதிகரித்து விட்டது இந்த விதவைப் பெண்களில் ஒரு சிலர் தானும் தனது பிள்ளைகளும் நாளாந்த சீவியத்திற்கு வருமானம் ஈட்ட வேண்டும் என்பதற்காக வீட்டிலிருந்தே செய்யும் இலேசான மற்றும் இலாபம் கூடிய தொழிலாக மதுபான விற்பனையையே தேர்ந்தெடுக்கின்றனர். எனவே வடிசாராம் காய்ச்சி விற்போருக்கு நல்ல மவுசு ஏற்பட்டிருந்தது.

(தொடர்ச்சி ..ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரத்த முடியாதது தூக்கம்



**இளைஞர்களுக்கு** 7 மணி நேரம் நித்திரை போதும் என்கின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். 5 மணி நேரத்துக்கும் குறைவாக தூங்கினால் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் உடா மாநிலத்தில் உள்ள பிரிகாம் யங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் எரிக் எய்ட் தலைமையிலான குழுவினர் நித்திரை தொடர்பாக சமீபத்தில் ஆய்வு நடத்தினர். தினமும் 7 மணி நேரம் தூங்கும் இளம் பருவத்தினர் கல்வி கற்பதில் சிறந்தவர்களாக உள்ளனர் என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்கா முழுவதும் சுமார் 1,724 பள்ளி மாணவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அவர்கள் தூங்கும் நேரம், தேர்வுகளில் பெறும் மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடந்தது. இதுபற்றி ஆராய்ச்சியாளர் எரிக் கூறுகையில், "16 வயதுள்ள ஒருவருக்கு 9 மணி நேரம் தூக்கம் அவசியம் என்று முன்பு நம்பப்பட்டது. அவர்களுக்கு 7 மணி நேர தூக்கம் போதும் என தற்போது தெரியவந்துள்ளது

வயது ஏற ஏற தூக்கத்தின் அளவை இன்னும் குறைக்கலாம். 10 வயது குழந்தைகள் 9 மணி நேரமும், 12 வயதினர் 8 மணிநேரமும், இள வயதினர் 7 மணி நேரமும் தூங்குவது சரியான அளவு" என்றார். தூக்கம் குறைவதால் ஏற்படும் பாதிப்பு பற்றி சிகாகோ பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. "எல்லாருக்கும் தூக்கம் அவசியம். நீண்ட காலமாக 5 மணி நேரத்துக்கும் குறைவாக தூங்கினால், உடலில் டெஸ்டோஸ்டிரோன் அளவு குறையும். அவர்களின் அன்றாட செயல்பாடுகளில் சுணக்கம், மந்தத் தன்மை ஏற்படும். செக்ஸ் வாழ்க்கையும் பாதிக்கப்படும்.

சரியாக தூங்காத பெண்களுக்கு புற்றுநோய், குறிப்பாக மார்பக புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம். அதிகளவு உடற்பயிற்சி செய்தாலும் சரியாக தூங்கினால் மட்டுமே அதன் முழு பலன் கிடைக்கும்" என்கிறது அந்த ஆய்வு.

# படுக்கையைப் பகிர்ந்தால் பக்கவிளைவா?

தம்பதியர்கள் உறங்கும் முறை குறித்தும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் இங்கிலாந்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 30 சதவீதத்துக்கும் அதிகமான தம்பதியர் சரியான தூக்கமில்லாமல் அவதிப்பட்டதாக தெரிவித்து உள்ளனர்.

இதற்கு காரணம் என்ன என்று ஆராய்ந்தபோது, கணவர் அல்லது மனைவியர், தங்கள் துணைக்கு கொடுக்கும் சில தொல்லைகள்தான் என்பதும் அப்போது தெரிய வந்தது. அதாவது, குறட்டை, பற்களைக் கடித்தல், படுக்கையில் புரள்தல் போன்றவற்றை அவர்கள் தொல்லைகளாக குறிப்பிட்டனர்.

இதுபோன்ற தொல்லைகளால் ஆரம்பக் காலங்களில் தூக்கம் கெட்டாலும், நாளடைவில் இதய நோய், மன அழுத்தம், பக்கவாதம், போக்குவரத்தின் போது விபத்துகள் போன்றவை ஏற்படுகிறது என்று அந்த ஆய்வு தெரிவித்துள்ளது. ஒரே அறையில் ஒன்றாக உறங்குவதே இந்த பிரச்சினைக்கு காரணம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஒரே படுக்கையறையில் உறங்கும் தம்பதியர் தூக்கம் கெடுவதனால் மன உளைச்சல் ஏற்பட்டு அது விவாகரத்தில் முடியவும் வாய்ப்பு உள்ளது என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். எனவே தம்பதியர் ஒரே படுக்கையை பகிர்ந்து கொள்வது ஆபத்தானது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். பிரச்சினையை தவிர்க்க தனித்தனி படுக்கையில் உறங்குவதாக 8 சதவீத தம்பதியர் கூறியுள்ளனர். இந்த ஆய்வு முடிவு, திருமணம் ஆகி குழந்தை பெற்ற தம்பதியருக்கு மட்டும்தான். பொருந்தும். இளஞ்ஜோடிகளுக்கு இந்த ஆய்வு முடிவு செல்லாது.

# ஆரோக்கிய வாழ்விற்கு அவசியம் விட்டமின் டீ



**இன்றைய உலகம்** அறைகளுக்குள்ளேயே அடைபடும் வாழ்க்கையைத் தான் எல்லாருக்கும் தந்திருக்கிறது. அலுவலகத்தின் அறைகளுக்குள் நாள் முழுவதும் அடைபடுவதும், விடுமுறை நாட்களில் வீடுகளில் அடைபடுவதும் தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் மூழ்கிப் போவதுமாய் கழிகிறது நமது வாழ்க்கை.


இந்த வாழ்க்கை முறைக்கும் குழந்தையின்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என அதிர்ச்சி வைத்தியம் அளிக்கிறது ஆஸ்திரேலிய ஆராய்ச்சி ஒன்று.

மூன்றில் ஒரு பங்கு ஆண்களுக்கு விந்தணுக்கள் வலுவற்றிருப்பதே இன்றைக்கு குழந்தையின்மைப் பிரச்சினை எங்கும் தழைத்து வளர்வதன் முக்கிய காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

விந்தணுக்கள் வலிமை இழக்க முக்கியமான ஒரு காரணம் உடலில் விட்டமின் டி குறைவது என்பது இவர்களுடைய ஆராய்ச்சியின் முடிவாகும். தேவையான அளவு விட்டமின் டி உடலில் இருக்கும் போது விந்தணுக்கள் வலிமையடைகின்றன. தம்பதியர் பெற்றோராகும் வாய்ப்பும் பிரகாசமடைகிறது. விட்டமின் டி யை பெறுவதற்கு செய்யவேண்டியதெல்லாம் சட்டையைக் கழற்றி ஓரமாய் வைத்து விட்டு கொஞ்சநேரம் வெயிலில் கால்களுக்கு இதமாக நடந்து வருவது தான்!

அலுவலக அறைகளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பவர்கள் அவ்வப்போது எழுந்து சாலையோரமாக நடந்து, விட்டமின் டி யைப் பெற்றுக் கொள்வது ஆரோக்கிய வாழ்வுக்குச் சிறந்தது என்பதே இந்த ஆராய்ச்சியின் முடிவாகும்.





# வாழ்க்கை என்னும் பூந்தோட்டத்தில் மகிழ்ச்சி பூக்க...

திருமணமான புதிதில் தம்பதியர் இடையே காற்றுகூட புக முடியாத அளவு நெருக்கம் ஏற்படுவது இயல்பு. தம்பதியர் இடையேயான காதல் உணர்வுகள் ஒரு கட்டத்திற்குப் பின் காணமல் போய்விடுகிறது. இதற்கு பல்வேறு காரணங்களை கூறலாம்.

தம்பதியரை முதலில் தாக்குவது மன அழுத்தம். அது பணிச்சூழல் பற்றியதாகவும் இருக்கலாம், பணம் தொடர்புடையதாகவும் இருக்கலாம். இந்த மன அழுத்தமே தம்பதியரிடையேயான நெருக்கத்தை பிரிக்கும் முக்கிய எதிரியாக உள்ளது. எனவே மன அழுத்தத்தின் அளவை தெரிந்து கொண்டு அது குடும்பத்தை பாதிக்காத அளவு மருத்துவர்களிடமோ, உளவியலாளர்களிடமோ ஆலோசனை பெற வேண்டும்.

அடுத்ததாக, உறவுகளிடையே ஏற்படும் சிக்கல்கள் தம்பதியரிடையேயான உறவுக்கு வேட்டு வைக்கும். தகவல் பரிமாற்றத்தில் புரிந்து கொள்ள இயலாத நிலை, தேவையற்ற விவாதங்களும் குடும்ப உறவுகளை பாதிக்கும்.

மது குடித்துவிட்டு போதையில் மிதப்பது, கண்ட போதை வஸ்துக்களை உபயோகித்துவிட்டு உறங்கிப் போவது தம்பதியரிடையே நெருக்கத்தை குறைக்கிறது.

அதைவிட, பணிச் சூழல், அதிகாலையில் எழுந்து அலுவலகம் சென்றுவிட்டு இரவு வீடு திரும்புவது, உடலில் சோர்வை அதிகப்படுத்திவிடுகிறது. நேரங்கெட்ட நேரத்தில் தூங்கி எழுவது அசதியை ஏற்படுத்துவதால் தம்பதியரிடையே இடைவெளி ஏற்படுகிறது. எனவே சரியான அளவில் பணி நேரத்தையும், ரொமான்ஸுக்கான நேரத்தையும் திட்டமிடவேண்டும்.

சிறு குழந்தைகள் பிறந்த சமயமாக இருந்தால் அது தம்பதியரிடையே இடைவெளி ஏற்படும் காலமாகும். எனவே குழந்தைக்கு அதிக நேரம் ஒதுக்குவதோடு, ரொமான்ஸுக்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

திருமணத்தில் பார்த்ததை விட இப்ப ரொம்ப குண்டாயிட்டோமோ என்ற எண்ணம் உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இதுவும் கூட இடைவெளிக்கு காரணமாகிறது. உடல் பருமன் காரணமாக ஆண்களுக்கு டெஸ்டோஸ்டிரான் சுரப்பு குறைவதும் தம்பதியரின் இடைவெளிக்கு காரணமாகிறது.

பெண்களுக்கு மெனோபாஸ் காலம் வந்தாலே வசந்த காலமே முடிந்துவிட்டதைப் போல உணர்வர். வலி, வறட்சி போன்றவைகளினால் உறவில் ஆர்வமின்மை ஏற்படுகிறது. இதுவும் தம்பதியரிடையே விஸ்வரூபமாக புகுந்து இடைவெளியை ஏற்படுத்துகிறது.

எனவே தம்பதியர் இருவரும் கலந்து ஆலோசித்து பிரச்சினையின் உண்மை தன்மையை புரிந்து கொண்டு இடைவெளியை குறைக்க முயல வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை என்னும் பூந்தோட்டத்தில் மகிழ்ச்சிப் பூக்கள் பூக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆசைகளைத் திருப்தி செய்வதைவிட அதைக் கட்டுப்படுத்துவதில்தான் அமைதி உள்ளது.
>
> — ரூஸ்வெல்ட் (தமிழ்)

# பாப்பா முரசு



## வாரம் ஒரு திருக்குறள்



**ஊக்கம் உடைமை**

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை.**

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது, தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

குறள் :594

## கனவு

பாப்பா முரசு சிறுகதை



இளையவூர் என்ற அழகிய கிராமத்திலே உள்ள பாடசாலையில் மரம் நடும் விழா நடந்து கொண்டிருந்தது. அதற்கான ஏற்பாடுகளை அந்த பள்ளியின் சமூக அறிவியல் ஆசிரியர் ராஜேந்திரன் செய்திருந்தார். படிப்பிலும் சரி, பாடசாலைக்கு வருவதிலும் சரி, எட்டாம் வகுப்பு படிக்கும் நவீன்குமார் என்ற மாணவன்தான் முதல் மாணவனாக வருவான். அன்று வந்ததில் இருந்தே மிகவும் கவலையாக இருந்தான்.

இதைக் கவனித்த ஆசிரியர் ராஜேந்திரன், அவனை அழைத்தார். அவனிடம் இதுபற்றி விசாரித்தார். உடனே அவன் தன் கவலையைப் பற்றி கூறினான். அதைக் கேட்ட ஆசிரியர், "நானும், உன் அப்பாவும் ஒன்றாகத் தான் படித்தோம். நான் சொன்னதாக உன் அப்பாவிடம் சொல்" என்று அவனிடம் ஆறுதல் கூறினார். நவீனும் ஆசிரியர் சொன்னதை ஆமோதித்து விட்டு, வீடு திரும்பினான்.

நவீனின் கவலைக்குக் காரணம் இதுதான். நவீன் வீட்டின் அருகில் ஒரு அழகான வேப்ப மரம் உள்ளது. பள்ளி விடுமுறை நாட்களில் அதில் ஊஞ்சல் கட்டி விளையாடுவான். அதன் நிழலில் அமர்ந்து படிப்பான். மதிய நேரங்களில் மரத்தின் அடியில் இதமாக தூங்குவான். அந்த மரத்தில் இரண்டு காகங்கள் தன் குஞ்சுகளோடு வாழ்ந்து வந்தன.

காலையில் பள்ளிக்குச் செல்லும் போது அதற்கு சாப்பாடு வைத்து விட்டுத்தான் செல்வான். அன்று இரவு நவீனின் பெற்றோர்கள் பேசிக்கொண்டது, அவன் காதில் விழுந்தது.

அந்த வேப்ப மரத்தை வெட்டி, விற்று விட்டு அந்த பணத்தில் வீடு கட்டுவதாக பேசிக்கொண்டிருந்தனர். ஆசிரியர் கூறியதைப் பெற்றோரிடம் சொல்லி, மரத்தையும், அதில் வாழும் பறவைகளையும் காப்பாற்றி விடலாம் என்ற சந்தோஷத்தில் வீட்டிற்கு வந்தான். அவனது பெற்றோர்கள் தோட்டத்திற்குச் சென்று, வீடு திரும்ப இரவு வெகு நேரமாகி விட்டதால், அவன் அசந்து தூங்கி விட்டான்.

"நவீன் சாப்பிடாமல், தூங்கி விட்டானே" என்று அவனது அம்மா வருந்தினார். அவனது அப்பா, மரம் வெட்டும் தொழிலாளி ஒருவரை அழைத்து வந்து அந்த மரத்தை அடியோடு வெட்டி, சிறு துண்டுகளாக அடுக்கி வைத்து விட்டார்.

மறுநாள், காலை காமாட்சி நவீனை, "எழுந்திருடா, நவீன், ஸ்கூலுக்கு போகணுமில்லே..?" என்று தட்டி எழுப்பினாள். தூக்கத்தில் பதட்டமுடன் எழுந்து வெளியே வந்தவன், நேராக தோட்டத்திற்குச் சென்றான். அங்கு வேப்ப மரம் வெட்டப்படாமல் இருந்ததைப் பார்த்து அசந்து போனான். அதில் காக்கைகள் தன் குஞ்சுகளுக்கு கொடுக்க உணவு வேண்டும் என்று, "கா...கா..." என்று கத்தியது. அப்போதுதான் இது வரை நடந்தது கனவு என்று புரிந்தது.

மறுநாள் காலையில் பள்ளிக்குச் சென்றபோது, மரம் வெட்டப்படாமல் இருந்ததற்கான காரணம் அவனுக்கு தெரிந்தது. ஆசிரியர், நவீனின் அப்பாவை வழியில் சந்தித்து, இதுபற்றி பேசி அந்த பிரச்சினைக்கு அப்போதே முற்றுப்புள்ளி வைத்து விட்டார். ஆசிரியர் ராஜேந்திரனுக்கு மனமுவந்து நன்றி கூறினான்.

## தகவல் களஞ்சியம்

* பன்னாட்டு நிதி நிறுவனமான ஐ.எம்.எப். 1947-ல் தொடங்கப்பட்டது. இது அமெரிக்காவில் பிரிட்டன் வுட்ஸ் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு முதலில் 44 நாடுகள் உறுப்பினராக சேர்ந்தன. தற்போது 151 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இதன் ஆரம்ப முதலீடு 8 ஆயிரத்து 800 மில்லியன் டொலர்கள். இங்கு அனைத்து நாட்டுப் பணமும் கிடைக்கும். பணம் தேவையான நாடுகள் இதனிடம் கடன் வாங்குகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை உறுப்பு நாடுகளில் உள்ள அறிஞர்கள் அனைவரும் இங்கு வந்து கூடுவர்.

* இரும்புக் கம்பிகளாலும், கனமான துணியாலும் ஆன குடைகள் 1850க்குப் பிறகு தான் பழக்கத்திற்கு வந்தன. டப்பேட்டா, சில்க், ரேயான், துணிகள் போன்றவற்றால் ஆன குடைகள் 1910க்குப் பின்னர் தான் தயாரிக்கப்பட்டன.

* உலகம் முழுவதும் வணிக ரீதியாக விற்பனைக்கு வரும் அன்னாசிப் பழங்களில் மூன்றில் ஒரு பங்கு ஹவாய் தீவில் விளைகின்றன.

* தவளை சத்தத்தைக் கொண்டு சீன விவசாயிகள் மழை எப்போது பெய்யும் என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்கின்றனர். நவீன சோதனைகள் மூலம் தவளையின் சத்தம் கொடுக்கும் அறிகுறி உண்மைதான் என்று நிரூபித்துள்ளனர், விஞ்ஞானிகள்.

## திமிங்கலச் சுறா



ரீங்கோடான் டைபஸ் என்பது இதன் அறிவியல் பெயர். திமிங்கலம் போன்று பெரியதாக இருப்பதால் இந்த சுறா, 'திமிங்கலச்சுறா' என்று அழைக்கப்படுகிறது. இதன் நீளம் 12 மீற்றர். இதன் எடை 11 டன்கள். இந்த மீன் 130 மீற்றர் ஆழம் வரை இந்திய பெருங்கடலில் பரவி உள்ளது. இதன் வாய், அதன் உடலின் அகலம் அளவுக்குப் பெரியதாக, தலையின் நுனியில் அமைந்துள்ளது. சிறிய மீன்கள், கணவாய்கள், கணவாய்கள் ஆகியவற்றை இது விரும்பி சாப்பிடுகிறது. திமிங்கலச் சுறாவின் கண்களில் நிக்டேட்டிங் சவ்வு கிடையாது.

## பொய்ப்பற்கள்



மனிதனுக்கு 32 பற்கள் உள்ளன. இது விபத்து, நோய், சுகாதாரமின்மை, கல்சியம் குறைவு, பல்வலி நோய் என்று பல்வித காரணங்களால் உதிர வாய்ப்புள்ளது. அப்படி உதிரும் பற்களுக்காக எலும்பு அல்லது தந்தத்தை அவ்விடத்தில் பொருத்திக் கொள்வார்கள். இதற்கு 'பொய்ப்பல்' என்று பெயர். இதனால், அருகில் இருக்கும் பற்களுக்கு பிரயோசனம் கிடைக்கிறது.

பல் முன்பு உதிர்ந்தாலும் பேசக் குறையும், நாக்கு பல இடைவெளியில் அடைபட வாய்ப்புள்ளது. கி.மு.700இல் வாழ்ந்த பினீசியன் மனிதனின் உடல் அகழ்வாராய்ச்சியில் கிடைத்தது. அதில் அவன் நான்கு பொய் பற்களைத் தங்க கம்பிகளால் கட்டியிருந்தது தெரிய வந்தது. கி.மு.700களில் சிலர் தந்தத்தாலும், தங்கத்தாலும் பொய் பற்களைக் கட்டியிருந்தனர் என்பதையும் அகழ்வாராய்ச்சி தெரிவிக்கின்றது. 1770இல் பாரிஸில் போர்சிலின் மூலம் பற்கள் தயாரிக்கப்பட்டது. தற்போது இந்த துறையில் பல நவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## மலர்களில் வாசனை வீசக் காரணம்



மலருக்கு வாசனை அதன் இதழ்களில் இருக்கும் சில எண்ணெய்ச் சத்துக்களால் வருகிறது. செடி அல்லது மரம் வளரும்போது இந்த எண்ணெய்ப் பொருள்கள் உருவாகின்றன. இந்த எண்ணெய்களை இரசாயனப்படி அலசிப் பார்த்தால், மிகவும் சிக்கலான அமைப்பைக் கொண்டவை.

சில நேரங்களில், இந்த எண்ணெய்ப் பொருட்கள் தானாகவே அமைப்பில் சற்று எளிமையாகி ஆவியாகிவிடுகின்றன. அப்போதுதான் மலரிலிருந்து வாசம் வீசுகிறது. ஒரு மலரின் வாசம் அதற்கு ஆதாரமாக உள்ள எண்ணெய்களின் கலவையைப் பொறுத்தே அமைகிறது. வெவ்வேறு கலவைகள் வெவ்வேறு வாசனைகள் உள்ளன. இந்த எண்ணெய்ப் பொருட்கள் மலரில் மட்டுமே இருப்பதில்லை. இலை, பட்டை, வேர், விதையில் கூட உள்ளன. ஓரேஞ்சு, எலுமிச்சை ஆகியவற்றின் பழங்களிலும், 'கஸிப்டஸ்' மரத்தில் இலையிலும், பாதாமின் விதையிலும் இந்த நறுமணம் உள்ளது.

## வரைந்து பாருங்கள்




இந்த படம் ஆரம்பம் என்ற புள்ளியில் இருந்து முடிவு என்ற புள்ளி வரை ஒரே கோட்டால் வரையப்பட்டுள்ளது. இதேபோன்று நீங்களும் வரைந்து பாருங்கள்.

## முன்னேற முயன்றிடு

அதிகாலை துயிலெழு
ஆண்டவனைத் தொழுதிடு
பெற்றோரை வணங்கிடு
உற்றார்க்கு உதவிடு!

கனிவான சொற்களை
இனிதாகப் பேசிடு
சான்றோரின்
வாழ்க்கையை
பாடமாகப் படித்திடு!


பெரியோரிடம் என்றுமே
பணிவாய் நீ நடந்திடு
பள்ளிக்கு அனுதினம்
தவறாது சென்றிடு!

அன்றாட பாடங்களை
நன்றாகப் படித்திடு
பொய் புரட்டு பேசாது
புகழுடன் நீ வாழ்ந்திடு!

மாதா பிதா குருவை
நீ வணங்கிடு
மனது வைத்து முன்னேற
நீ முயன்றிடு!

மூத்தோர் சொல்
வாக்குதனை மதித்திடு
மற்றோர்க்கு உதாரணமாய்
நீ திகழ்ந்திடு!

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டும் சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கின்றது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.03.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல. 930
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 928

**பரிசுக்குரியவர்:** அக்சிந்திகா, நுவரலி கிழக்கு, நுவரலி.

சான்றிதழ்களுக்குரியவர்கள்

01. நுமதுரங்கா, மாளிப்பாய்.
02. எஸ்.துவாரகன், நாவலடி, கொக்கட்டிச்சோலை.
03. சி.லதாங்கி, கரவெட்டி.
04. பரிக்ஷதிபா, பாரதிபுரம், கிளிநொச்சி.
07. டெ.சனா, தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.
08. எம்.மதுரங்கா, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு.
09. மயூரந்தா, கொழும்பு 6.
10. எஸ்.கஜானன், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா செய்வது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**யோகா பயிற்சியின் நன்மைகள்**

01. உடல் வெளி உறுப்புகளும் உள் உறுப்புகளும் பலம் அடைகின்றன. புத்துணர்ச்சி அடைகின்றன.

02. இரத்த ஓட்டம் சீரடைகிறது.

03. நல்ல சிந்தனை, செயல் உண்டாகும்.

04. நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் இருக்கலாம்.

05. ஆயுள் நீடிக்கும். இதற்கு மூச்சு பயிற்சி உத்தரவாதம் தருகிறது.

06. பெரு, சிறு நோய்கள் வராமல் தடுக்கலாம்.
வந்த நோயினைக் கட்டுக்குள் வைக்கலாம்.

07. உற்சாகம் பெருகும். உடல் ஆரோக்கியம் கூடும்.

08. உடலின் மண்டலங்கள் அனைத்தும் [நரம்பு, இரத்த ஓட்டம் ஜீரணம்] போன்ற மண்டலங்கள் சீரடையும்.

09. இளமையாய் இருக்கலாம். வீரியம் கூடும்.
நோய் எதிர்ப்பு சக்தி கூடும். வளர்சிதை மாற்றம் சீராகும்.
மனவலிமை கிட்டும். மன அழுத்தம் போக்கலாம்.

10. மூளை இதயத்திற்கு நல்ல ஓய்வு கிட்டும்.
அதன் திறனை மேம்படுத்தலாம்.


11. கோபம் பயம் நீக்கலாம்.

## வஜ்ராசனம்

இரு கால்களை பின்புறமாக மடக்கி உட்கார்ந்து [illegible] இரு [illegible] இருக்க வேண்டும். இந்த நிலையில் 15 நிமிடம் இருக்கலாம். **பயன்கள்:** வயிற்றில் உள்ள கோளாறுகள், [illegible] தண்டுவடம் வலுப்பெறும்.



## விபரீதகரணி




நேராக படுத்துகால்கள் இரண்டையும் 90 டிகிரிக்கு மேலே தூக்க வேண்டும். மேலே தூக்கும் போதே மூச்சை இழுத்து விட்டு கொண்டே இரண்டு கைகளை பக்கவாட்டில் இறுகப் பிடித்து கொள்ள வேண்டும்.

**பயன்கள்:** இந்த ஆசனம் செய்வதனால் இடுப்பு,வயிறு,பின்புறச் சதைகள் ஆகியன குறைந்து அழகாகத் தோற்றமளிக்கும்.

## புஜங்காசனம்

தரையில் குப்புறப்படுத்து கொண்டு இரண்டு கைகளையும் உங்கள் காதுகளுக்கு நேராக நிறுத்தி உங்களுடைய தலையை மட்டும் தூக்கவும் உங்களுடைய வயிறு பகுதியை தூக்கக் கூடாது.


பயன்கள்: இந்த ஆசனம் செய்வதனால் வயிற்று பகுதியில் உள்ள தசைகள் [illegible] இரத்த ஓட்டம் அதிகரிக்கும். முதுகு தண்டுவடத்தில் உள்ள வலி நீங்கும்.



## பச்சிமோத்தாசனம்

இரு கால்களை நீட்டி நேராக உட்காரவும். இரு கைகளும் மேலே உயர்த்தி மெதுவாக மூச்சை இழுத்து விட்டுக்கொண்டே கை விரல்களால் கால் பாதத்தையோ அல்லது கால் விரலையோ பிடித்து கொள்ளவேண்டும். கால்களை மடக்கக் கூடாது. இந்த நிலையில் 3 முதல் 5 நிமிடங்கள் வரை இருங்கள்.

பயன்கள்: [illegible] குறைய நல்ல வழி இது. இடுப்பு பகுதியில் இருக்கும் [illegible].



நன்றி-இணையம்




எல்லோருக்கும் — அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் — ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஒருங்களை முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

பூலானை முதலில் கண்டதிலிருந்தே டொக்ரருக்கு அவள் மீது ஆசை வந்து விட்டது. சிகிச்சைக்காக அதிக பணம் கேட்டதும் உள்நோக்கத்தோடுதான். அவ்வளவு பணம் அவர்களிடம் இருக்கப் போவதில்லை. பணத்துக்குப் பதிலாகப் பூலானை வளைக்கலாம் என்றுதான் டொக்ரர் நினைத்தார்.

கேட்ட பணத்தைப் பூலான் கொடுத்தபோது அவருக்கு ஏமாற்றமாகி விட்டது. இத்தனை பணம் இவர்களிடம் ஏது? என்று மனதின் ஓரத்தில் சந்தேகமும் முளைவிட்டது.

'பத்திரிகையில்' மல்லாவும் அவன் காதலி பூலானும் விபத்தில் பலியானதாகச் செய்தியைப் பார்த்ததும் அவருக்கு அந்தச் சந்தேகம் வலுத்துவிட்டது.

பூலானின் படமோ, மல்லாவின் படமோ பொலிசாரிடம் இல்லையென்பதால் அவர்களது பெயர்கள் மட்டும்தான் செய்தியில் இருந்தது.

என்றாலும் ஒரு குருட்டு நம்பிக்கையுடன், மல்லாவையும், பூலானையும் தான் இனம் கண்டுவிட்டது போல கதையைப் போட்டுப்பார்த்தார்.

அவர்கள்தான் மல்லாவும், பூலானும் என்று நிரூபிக்க அவரிடம் எந்த ஆதாரமும் இல்லைதான். ஆனால் பொலிசில் போய் சொல்லி விட்டாரானால் தங்கள் கதி அதே கதிதான் என்று நினைத்தாள் பூலான்.

டாக்டரின் கண்கள் தன்மீது மேய்ந்த விதத்தில் இருந்தே அவரது சபலபுத்தியை முன்னரே புரிந்துகொண்டாள் பூலான்.

டாக்டரின் பலவீனத்தைப் பயன்படுத்தி மல்லாவைக் காப்பாற்ற நினைத்தாள்.

மார்புச் சேலை விலகியிருந்ததால் விம்மிக் கொண்டிருந்த பூலானின் எழுச்சிகள் அவரை நிலை குலையச் செய்தன.

பார்வை அங்கேயே குத்திட்டு நின்றது. தன் தந்திரம் பலித்துக் கொண்டிருப்பது பூலானுக்குச் சிரிப்பாக இருந்தது. தேன் குடித்த நரி போல தெரிந்தார் டொக்ரர்.

பூலானின் அருகில் வந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டார். பூலான் தலையை இடதுபுறம் சரித்து ஒரு பார்வை வீசினாள்.



அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்த டாக்டரின் கை நடுங்கியது.

"இவன் பலவீனமானவன். பயந்து பயந்து தப்புச் செய்பவன்" பூலான் மனதில் குறித்துக்கொண்டாள்.

பூலானின் கையைப் பிடித்துக்கொண்டிருந்த டொக்ரர் சட்டென்று அவளை தன்னை நோக்கி இழுத்து மூச்சு திணறும்போல அணைத்தான். கைகளை அலையவிட்டான் பூலானின் முதுகிலும், முதுகுக்குக் கீழேயும் அவன் கைகள் அவசரமாய் அலைந்தன.

பூலானுக்கு வெறுப்பாக இருந்தது. அப்படியே அணைத்தபடி கழுத்தை திருகிவிடலாமா என்று நினைத்தாள்.

அது சுலபம்தான். ஆனால் பொலிசார் உஷாராகிவிட்டால் மல்லாவின் காயம் குணமாகும் வரை ஜான்சியிலோ அல்லது கான்பூரிலோ தலைமறைவாக இருப்பது ஆபத்தாகிவிடலாம்.

"ஆசையா டொக்ரர்?" என்றாள் வருவித்துக் கொண்ட மயக்கமான குரலில்.

"பின்னே இல்லையா?" கைகள் தொடர்ந்து அங்குமிங்கும் அலைந்து அவசர அசைவு நடத்திக் கொண்டிருந்தன.

இப்போது முன்புறமாய் கைகள் வர பூலான் நாசுக்காய் தடுத்தாள்.

"ஏன்?" தடையையும் மீறி அவரின் கை ஒன்று மிக அவசரமாய்... பூலான் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"இன்று வேண்டாம்-சரியா?"

"நாளை நாளைக்கு?"

"ம்!"

"உண்மையாகவா? ஏமாற்றமாட்டாயே. நீதான் பூலான்தேவியா?"

"யார் அது பூலான் தேவி?" நம்பும்படியாக நடித்தாள் டொக்ரர் சந்தேகம் தடவிய பார்வையோடு.

"அப்படியானால் ஏன் பயந்தாள்?"

"யார் பயந்ததாம்?"

"இல்லையா. அப்படியானால் என்னை ஏன் இதற்கு அனுமதிக்கிறாய்?" பூலான் எதிர்பாராத தருணத்தில் அவன் கன்னத்தில் முத்தமிட்டான்.

கன்னத்தை துடைத்தபடி "உங்களைப் பார்த்ததிலிருந்தே..." என்று நிறுத்தி, வேண்டுமென்றே வெட்கப்பட்டாள்.

"பார்த்ததில் இருந்து...?" டாக்ரர் இழுத்தபடி அவசரக் குறுக்கீடு செய்தான்.

பூலான் இன்னமும் வெட்கத்தை அடர்த்தியாகக் காட்டியபடி, "பார்த்ததில் இருந்து ஆசை!" என்று சொல்லிவிட்டு அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கதவைத்திறந்து ஓட, டொக்ரர் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான்.

டொக்ரர் அங்கிருந்து போனதும் பூலானின் யோசனைப்படி உடனடியாக அந்த இடத்திலிருந்து வெளியேறினார்கள்.

மல்லாவின் சகோதரர் ராம்லால் வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்த தேடிப் போனார். ஒரு வண்டியும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பிவந்தார்.

தன்னுடன் வேராவை அழைத்துக்கொண்டு புறப்பட்டாள் பூலான். செல்லும் போது மறக்காமல் கைத்துப்பாக்கியை தன் இடுப்புச் சேலையில் செருகிக்கொண்டாள்.

ஒரு உழவு இயந்திரம் தன் எதிர்ப்பட்டது. அதனைச் செலுத்தி வந்தவன் இளைஞனாக இருந்தான்.

"முதலில் உதவி கேட்கலாம். மறுத்தால் உதைத்துக் கேட்கலாம்" என்றாள் பூலான். வேரா பணிவாகச் சிரித்தான்.

"கான்பூருக்குச் செல்ல வேண்டும். அவசரம் உன்னால் உதவ முடியுமா? பணம் தருகிறோம்" என்ற பூலானை அப்போதுதான் மீசை துளிர்விட ஆரம்பித்திருந்த அந்தப் பையன் பார்த்த பார்வையில் வயதுக் கோளாறு இருந்தது.

(திருப்பங்கள் தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை நிறைவேறியது

நாயகி அசின், அமீர்கானுடன் இணைந்து கஜினி படத்தில் நடித்ததன் மூலம் பொலிவூட்டில் பிரபலமானார். பின்னர் லண்டன் டிரீம்ஸ், ரெடி படங்களில் சல்மான்கானுடன் ஜோடி சேர்ந்தார்.

அமீர்கான், சல்மான்கானை தொடர்ந்து ஷாருக்கானுடன் ஜோடியாக நடிக்க விரும்பினார். அதுவும் தற்போது நடந்துள்ளது. இதுகுறித்து அசின் கூறியதாவது, ஷாருக்கான் ஜோடியாக அடுத்த படத்தில் நடிக்க உள்ளேன். ஏற்கனவே அவருடன் நடிக்க வேண்டிய ஒரு வாய்ப்பு நழுவி போனது. விரைவில் இப்படம் பற்றிய முழு விவரங்களையும் வெளியிடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கி ஓயவில்லை

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில், கலைப்புலி தாணு தயாரிக்கும் துப்பாக்கியில் இளைய தளபதி விஜய் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு மும்பையில் நடந்துவந்த நிலையில், தயாரிப்பாளர்-பெப்ஸி பிரச்சினை காரணமாக படப்பிடிப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஏ.ஆர்.முருகதாஸும் குறும்படம் ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இதனால் துப்பாக்கி கைவிடப்பட்டதாக பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன. இது விஜய்யின் ரசிகர்களுக்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து விஜய் மற்றும் அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் விசாரித்தபோது, துப்பாக்கி நிறுத்தப்பட்டு விட்டது என்று வெளிவரும் தகவல்களை நம்பவேண்டாம். தயாரிப்பாளர்-பெப்சி பிரச்சினை போன்றவையெல்லாம் தீர்ந்ததும் படப்பிடிப்பு தொடங்கிவிடும் என்று கூறினார்.



# சிம்பு – நயன் இணைய வாய்ப்பில்லை

கொலிவூட்டில் சிம்பு நடிக்கும் வடசென்னை திரைப்படத்தை ஆடுகளம் வெற்றிமாறன் இயக்குகிறார். இதில், சிம்புவுடன் நாயகி ஆண்ட்ரியா இணைகிறார். மேலும் மற்றொரு நாயகிக்கான தெரிவு நடந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் சிம்புவுடன் நடிக்க நயன்தாராவை, வெற்றி மாறன் ஒப்பந்தம் செய்ய உள்ளார் என்று கொலிவூட்டில் தகவல் வெளியானது. ஆனால் இதற்கு இயக்குனர் வெற்றி மாறன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, வட சென்னையில் சிம்பு வுக்கு ஜோடியாக நடிப்பதற்கு நயன்தாராவிடம் எந்த ஒரு பேச்சு வார்த்தையையும் மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.





# நிறம் மாறும் நாயகி

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் கோச்சடையான் பட வேலைகள் தொடங்கியுள்ளன. இதில் ரஜினி ஜோடியாக தீபிகா படுகோனே நடிக்கிறார். ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார். ரஜினிகாந்த் மகள் சௌந்தர்யா இயக்குகிறார்.

தீபிகா படுகோனே சிவப்பு என்பதால் ரஜினிக்கு ஜோடி பொருத்தமாகும் வகையில் கிராபிக்சில் அவரது நிறம் கறுப்பாக்கப் படுகிறது. இதற்காக அவர் சென்னை வந்தார். தீபிகா படுகோனைப் படம் எடுத்து ரஜினியை போல நிறம் மாற்றும் பணிகள் நடந்தன. இப்படத்தில் ரஜினியின் ருத்ர தாண்டவ நடனம் இடம் பெறுகிறது. இதையும் உயர் தொழில்நுட்பத்தில் படமாக்க உள்ளனர். கோச்சடையானின் பெரும் பகுதி படப்பிடிப்பு லண்டனில் நடக்கிறது. இதற்காக படக்குழுவினர் லண்டன் புறப்பட உள்ளனர். கோச்சடையான் படம் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மன்னனைப் பற்றிய கதை. சரித்திர கால அரங்குகள் அமைத்து படப்பிடிப்பை நடத்துகின்றனர்.

# மனதைத் திறந்தார் ஸ்ருதி

ஸ்ருதி ஹாசன் தனது மனதுக்கு பிடித்த ரகசிய காதலன் யார் என்றும் வாழ்நாள் உறவு பற்றியும் பேசியுள்ளார். அதாவது, கனடா நடிகர் மற்றும் பாடகருமான ரயன் கோஸ்லிங்தான் எனது இரகசிய காதலன் என்று கூறியுள்ளார். ஆனால் வாழ்நாள் உறவு அதாவது திருமணம் குறித்து எதுவும் சொல்லமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

# செய்து

கடந்த
கமல்ஹாசன
படத்தை தெ
ராணி எலிச
தொடங்கி
18ஆம் நூற்
வீரன் யூசுப்
என்பதால்,
அரங்குகள்,
என்று இதற்
கும் என ம
கமல்ஹாசன்

தற்போது
நாயகம்" ப
போவதாகவ
முக்கிய வே
உள்ளதாகவ
பேட்டியளித்

# தாம

கெ
ஜீவா,
இசைய
கௌ
கவிஞர்
கௌதம
பொன்
எழுதுகி
இளைய
தாமரை
கிடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்ச்சையில் சிக்கியது பில்லா-2

கொலிவூட்டில் சம்பளப் பிரச்சினை காரணமாக தயாரிப்பாளர்களுக்கும், பெப்சி தொழிலாளர் அமைப்பினருக்கும் இடையே பிரச்சினைகள் நடைபெறுவது தெரிந்ததே.

இதனால் படப்பிடிப்புகள் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு சில படப்பிடிப்பு மட்டும் வெளிமாநிலங்களில் நடைபெற்று வருகிறது.

அஜீத் நடிக்கும் பில்லா-2 படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு ஐதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் ஸ்ரூடியோவில் நடந்து வருகிறது.

இந்நிலையில் அங்கு சென்ற சினிமா தொழிலாளர்கள் சிலர், தமிழ் திரையுலகம் வேலை நிறுத்தத்தில் இருக்கிறது. நீங்கள் மட்டும் படப்பிடிப்பை எப்படி நடத்தலாம் என்று கூறி, படப்பிடிப்பை நடக்கவிடாமல் முற்றுகையிட்டனர்.

இது குறித்து படத் தயாரிப்பாளர் சுரேஷ் பாலாஜி கூறும்போது, பில்லா 2 படத்தில் விடுபட்ட காட்சிகளை மட்டுமே படமாக்கி வருகிறோம்.

சில பெப்சி உறுப்பினர்கள் வந்து தங்கள் ஆட்சேபத்தை தெரிவித்தனர். குறிப்பிட்ட சினிமா ஸ்ரூடியோவுடன் நாங்கள் மேற்கொண்ட ஒப்பந்தப்படி அங்குள்ள உபகரணங்கள் மற்றும் ஊழியர்களை பயன்படுத்திக்கொள்ள ஒப்புதல் இருக்கிறது.

சம்பளப் பிரச்சினையில் இருக்கும் யாரையும் இந்த பணியில் ஈடுபடுத்தவில்லை என அவர்களிடம் விளக்கினோம். பின் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்தினோம், என்று தெரிவித்துள்ளார்.



ஒரு கல் ஒரு கண்ணாடி



# மணவாளனை தேடுகிறார்* திரிஷா

நடிகை திரிஷா, தெலுங்கு நடிகர் ராணாவை காதலிப்பதாகவும் விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் செய்திகள் வெளியாயின.

இதற்கு பதில் அளித்துள்ள திரிஷா, நான் நடிகையாக இருப்பதால் என்னைப் பற்றி நிறைய வதந்திகள் வருகின்றன. ராணாவை நான் காதலிப்பதாகவும் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் வதந்தி பரப்பியுள்ளனர்.

ராணாவும் நானும் நண்பர்கள். எங்களுக்குள் வேறு எந்த தொடர்பும் இல்லை.
திருமணத்தை பற்றி நான் சிந்திக்கவில்லை என்று கூறமாட்டேன். முதலில் எனக்கு மாப்பிள்ளையாக வருவதற்கு தகுதியானவரை நான் சந்திக்க வேண்டும். இதுவரை அப்படிப்பட்ட நபரை நான் சந்திக்கவில்லை. இப்போது நான் தனிமையில் சந்தோஷமாக இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

...ம் கொத்திப்பறவை



# புதிய அவதாரம்

கொலிவூட்டில் அசோக், கிருத்திகா இருவரும் இணைந்து நடித்துள்ள "வெட்கத்தை கேட்டால் என்ன தருவாய்" திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளது. பாடலாசிரியரான தபு ஷங்கர், வெட்கத்தை கேட்டால் என்ன தருவாய் என்ற காதல் பொழுதுபோக்கு சித்திரத்தை இயக்கி, இயக்குநராக அறிமுகமாகியுள்ளார்.

இதுகுறித்து இயக்குநர் தபு ஷங்கர் கூறியதாவது, இந்தப் படத்தில் நாயகன்-நாயகி இருவரையும் காதல் இணைத்து வைக்கிறது. முற்றிலும் வித்தியாசமான் வகையில் படத்தின் கதையை சொல்லியிருக்கிறோம். படத்துக்கு இமான் இசையமைத்துள்ளார். பாடல்களை நான் எழுதியுள்ளேன்.

படத்தில் வரும் லைலா லைலா.. பாடலில் எனக்கு பிடித்த கவிஞர்கள் அறிவுமதி, கவிக்கோ அப்துல் ரகுமான் மற்றும் இசையமைப்பாளர்கள் இசைஞானி இளையராஜா, ஒஸ்கார் புகழ் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோரை போற்றியுள்ளேன் என்று இயக்குனர் தெரிவித்துள்ளார்.

# ...செய்தியைத் தூசு தட்டியது இணையம்

கடந்த 1997ஆம் ஆண்டு நடிகர் ...ல்ஹாசன் மருதநாயகம் என்ற ...த்தை தொடங்கினார். இங்கிலாந்து ...ணி எலிசபெத் இதன் படப்பிடிப்பை ...தாடங்கி வைத்தார். மருதநாயகம் ...ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போர் ...ன் யூசுப்கானை பற்றிய கதை ...ன்பதால், பிரமாண்ட சரித்திர ...ரங்குகள், போர் வீரர்கள் உடைகள் ...ன்று இதற்கு ரூ.150 கோடி செலவா-...ம் என மதிப்பிடப்பட்டதால் படத்தை ...ல்ஹாசன் கைவிட்டார்.

...தற்போது மீண்டும் "மருத ...யகம்" படப்பிடிப்பை தொடங்கப் ...ாவதாகவும் இதில் ரஜினியும் ...க்கிய வேடத்தில் நடிக்க ...ள்ளதாகவும் கமல், மும்பையில் ...ட்டியளித்ததாக செய்திகள் வெளியாயின.

இது குறித்து கமல்ஹாசன் தரப்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது, மருதநாயகம் படப்பிடிப்பை தொடங்கப் போவதாகவும் ரஜினியும் அதில் நடிப்பார் என்று வெளியான செய்தி உண்மையல்ல. கடந்த 15 வருடத்துக்கு முன்பு நானும் ரஜினியும் நட்சத்திர கலை விழாவுக்காக சிங்கப்பூர் சென்றபோது நான் அளித்த பேட்டியை எடுத்து இப்போது சொன்னதாக இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

நான் தற்போது விஸ்வரூபம் படப்பிடிப்பில் இருக்கிறேன். இப்படம் முடிந்ததும் ஒஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிக்கும் 'தலைவன் இருக்கின்றான்' என்ற படத்தில் நடிக்க உள்ளேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# ...ாமரைக்குக் கிடைத்தது வாய்ப்பு!

கௌதம்மேனன் இயக்கும் நீ தானே என் பொன்வசந்தம் திரைப்படத்தில் ஜீவா, சமந்தா நடிக்கின்றனர். இத்திரைப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார்.

கௌதம்மேனனின் முதல் படமான மின்னலே படத்திலிருந்து கவிஞர் தாமரை பாடல் எழுதிவருகிறார். இந்நிலையில் கௌதம் தற்போது இயக்கிவருகிற நீ தானே என் பொன்வசந்தம் திரைப்படத்திற்கும் தாமரை பாடல் எழுதுகிறார். இதன்மூலம் இசைஞானி இளையராஜாவின் இசையில் கவிஞர் தாமரைக்கு பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடு நகரத்திட்டமிடல் சட்டமூலமும் கிழக்கு மாகாண சபையும்



எமக்குரிய அதிகாரங்களை நாமே திருத்தி மத்திய அரசுக்கு தாரைவார்க்கும் வேலையை ஏற்றுக்கொள்ளமுடியாது. மத்திய அரசை திருப்திப்படுத்துவதற்கு ஆளும் தரப்பில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளுக்கு இது தருணமல்ல. அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக வெளி நாடுகள் ஆர்வத்துடன் இருக்கும் போது பேச்சுவார்த்தை விடயம் நடைமுறையில் இருக்கும் போது ஐக்கியநாடுகள் சபை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக விழிப்படைந்த நிலையில் உள்ள சூழலில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உரிமையை பெறுவதா அல்லது கபளீகரத்துக்கு துணைபோவதா? திருத்தம் ஊடாக புத்தசாசன அமைச்சுக்கு எமது அதிகாரத்தை வழங்க உங்களுக்கு எந்த மக்களும் வாக்களிக்கவில்லை. இதை மறுக்க முடியாவிட்டால் இதில் இருந்து ஒதுங்குங்கள். இன்னும் காலம் போகவில்லை.

மாகாண சபை அதிகாரம் என்பது தட்டில் வைத்து சும்மா தூக்கிதரப்படவில்லை. தமிழ் மக்கள் இரத்தம் சிந்தி தியாகம்செய்து தங்கள் வளங்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கானோர் விதவையாக்கப்பட்டு பல குழந்தைகள், தாய், தந்தை முகம்தெரியாது பரிதவித்து பலர் உயிருக்கு பயந்து இடம்பெயர்ந்து பெறப்பட்டவை என்பதை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிலர் புரியாமல் இருப்பது தமிழ்மக்கள் மத்தியில் வேதனையை அளிக்கின்றது.

**இரா. துரைரெத்தினம்**
கிழக்கு மாகாண உறுப்பினர்.



நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது முதல் பல்வேறு எதிர்ப்புகள் வந்தவண்ணமும், அவை வலுத்த வண்ணமுமேயுள்ளன. மாகாண சபைகளைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றே கூற வேண்டும். அதன் உரிமைகளில் கைவைக்கின்ற வகையில் இச்சட்டமூலம் அமைக்கப்பட்டுள்ளது என்பதே முக்கிய குற்றச்சாட்டாக இருக்கிறது. இக்கட்டுரை இது குறித்தே ஆராய்கிறது.

இந்த நிலையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்த சட்டமூலத்தை எதிர்ப்பது என்று தீர்மானித்துள்ளது.

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடி இதற்கான தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது. இச்சட்டமூலத்தின் ஊடாக மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. இதனால் சிறுபான்மையினத்தவர் பாதிக்கப்படுகின்றனர். இதனாலேயே இச்சட்டமூலத்தை எதிர்க்கின்றோம். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாகவே நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்த சட்டமூலத்திற்கு தீர்வு காண வேண்டும் என அக்கட்சியின் பொது செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபையில இச்சட்டமூலம் முன்வைக்கப்படும் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்தே வாக்களிக்கவுள்ளனர். அத்துடன், குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் ஆளும்தரப்பிலுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கம் எதிர்த்தே வாக்களிக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறுபான்மை மக்களின் பல்வேறு உரிமைகளை உள்வாங்கும் நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்த சட்டமூலம் இதுவரை மேல் மாகாண சபையில் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில், சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு மாகாண சபையின் அதிகாரங்களைப் பறிக்கும்போதும் சட்டமூலத்தை நிராகரியுங்கள் என்ற வகையிலான கோஷங்கள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன.

இதிலும் முக்கியமாக ஒருசிலரே இது குறித்த கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வருகின்றனர். கிழக்கில் ஆளும் தரப்பு இதுவரை வெளிப்படையாக தமது நிலைப்பாட்டினை வெளிக்கொணராத நிலையில் எதிர் வரும் 28 ஆம் திகதி இச் சட்ட மூலம் தொடர்பிலான விவாதம் நடை பெறவுள்ளது. அப்போது கிழக்கு மாகாண சபையின் ஒட்டுமொத்த முடிவு தெரிய வரப்போகிறது.

இவ்விவாதம் குறித்த பின்னணியாக 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்ட வழங்கவேண்டிய அதிகாரங்களையும் ஏனைய அதிகாரங்களையும் மத்திய அரசின் புத்தசாசன அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கும் கையடக்கம் செய்வதற்குமாக ஜனவரி மாதம், 31ஆம்திகதி (269ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலத்தை புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு கிழக்கு மாகாண ஆளுனர் ஊடாக கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தை கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் சபாநாயகர் முன்வைத்தபோது சகல கட்சித் தலைவர்களும் இது தொடர்பாக தெளிவின்மையாலும், நேரம் போதாததாலும் ஒத்திவைக்குமாறு கோரியமைக்கு அமைவாக அவ்விடயம் ஆளுநருக்கு அறிவிக்கப்பட்டு, மீண்டும் குறிப்பிட்ட தினத்திற்குள் சபையில் சமர்பிக்குமாறு சபாநாயகர் ஆளுநரால் பணிக்கப்பட்டதற்கமைவாக கடந்த 13ஆம் திகதி விசேட விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையின் நியதிகள் சட்டக்குழு மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் பலதடவைகள் சபாநாயகர் தலைமையில் கூடிக் கலந்துரையாடியது. இவ்வேளையில் இச்சட்டமூலத்தை திருத்தத்துடன் ஆதரிப்பதாக ஆளும் தரப்பினரும் இச்சட்டமூலத்தை நிராகரிப்பதோடு எதிர்ப்பதாகவும் எதிர்க்கட்சியினர் தங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

மீண்டும் கடந்த 13ஆம் திகதி கிழக்கு மாகாணசபையில் இது தொடர்பான விசேட அமர்வு நடைபெற்றது. முதலமைச்சரால் திருத்துவதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டு உதுமாலெவ்வை அமைச்சர் அவர்களால் வழிமொழியப்பட்டு சபை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் சபாநாயகர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதிலும் இரண்டு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு எதிர்க் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் சபை கூடியபோது உதுமாலெவ்வை அமைச்சர் திருத்தப் பிரேரணை தொடர்பாக விவாதத்தை ஆதரித்து பேசியதைத் தொடர்ந்த, எதிர்க்கட்சியினராகிய ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் சபீ.ஆர்ஸெல்.

ஜே.வி.பி உறுப்பினர்கள் திருத்தப் பிரேரணை சட்டத்திற்கு முரணாக முன்வைக்கப்படுவதாலும் சரியான முறையாக இச்சபைக்கூட்டம் கூட்டப்படவில்லை எனவும் கூறி இதற்கான விளக்கத்தை சபாநாயகர் தரவேண்டும் எனவும் கேள்வி எழுப்பினர்.

சபாநாயகர் பதிலளிக்க தவறியதால், எழுந்து ஆட்சேபனையை தெரிவித்திருந்தனர். அவ்வேளையில் ஆளும்தரப்பினர் அனைவரும் எழுந்துநின்று சட்ட திருத்தத்தை ஆதரித்து பேசிக்கொண்டிருந்தனர். எதிர்கட்சியினர் தொடர்ந்தும் தவறான முறையில் இச்சபைக் கூட்டத்தை சபாநாயகர் கூட்டமுடியாது எனக் கூறினர். இதன்காரணமாக சபையில் ஆக்ரோஷமான முறையில் வாக்குவாதம் நடைபெற்றது. இருபகுதியினரும் மாறிமாறி கருத்துக்களை தெரிவித்துக்கொண்டே இருந்தனர்.

அதனால் இறுதியாக சபையை நடத்த உறுப்பினர்கள் ஒத்துழைக்காததால் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் சபைக் கூட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக சபா நாயகர் பாயிஸ் அறிவித்தார். இந்த நிலையில் விவாதம் நடைபெறும் வரையில் முடிவு கிடைக்கப்போவதில்லை.

பகிரங்கமாக தனது எதிர்க்கருத்தை வெளியிட்டுவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம்,

**பிரகஸ்பதி**

கிழக்கு மாகாணசபைக்கு வழங்கப்பட்ட, வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களை புத்தசாசன அமைச்சு கபளீகரம் செய்வதற்கு கிழக்கு மாகாணசபை சிறுபான்மை கட்சிகள் துணைபோக மாட்டார்கள் என நம்பினோம். இது வேறுவடிவத்தில் மீண்டும் விசுவரூபம் எடுத்துள்ளது. எமக்குரிய அதிகாரங்களை நாமே திருத்தி மத்திய அரசுக்கு தாரைவார்க்கும் வேலையை ஏற்றுக்கொள்ளமுடியாது. மத்திய அரசை திருப்திப்படுத்துவதற்கு ஆளும் தரப்பில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளுக்கு இதுதருணமல்ல.

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக வெளிநாடுகள் ஆர்வத்துடன் இருக்கும் போது பேச்சுவார்த்தை விடயம் நடைமுறையில் இருக்கும் போது ஐக்கிய நாடுகள் சபை இலங்கை இனப்பிரச்சினை தொடாபாக விழிப்படைந்த நிலையில் உள்ள சூழலில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உரிமையை பெறுவதா அல்லது கபளிகரத்துக்கு துணை போவதா? திருத்தம் ஊடாக புத்தசாசன அமைச்சுக்கு எமது அதிகாரத்தை வழங்க உங்களுக்கு எந்த மக்களும் வாக்களிக்கவில்லை. இதை மறுக்க முடியாவிட்டால் இதில் இருந்து ஒதுங்குங்கள்.


இன்னும் காலம் போகவில்லை. மாகாணசபை அதிகாரம் என்பது தட்டில் வைத்து சும்மா தூக்கிதரப்படவில்லை. தமிழ் மக்கள் இரத்தம் சிந்தி, தியாகம் செய்து, தங்கள் வளங்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கானோர் விதவையாக்கப்பட்டு பல குழந்தைகள் தாய், தந்தை முகம்தெரியாது பரிதவித்து பலர் உயிருக்கு பயந்து இடம்பெயர்ந்து பெறப்பட்டவை என்பதை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிலர் புரியாமல் இருப்பது தமிழ்மக்கள் மத்தியில் வேதனையை அளிக்கின்றது.

இழப்பில் உருவாக்கப்பட்ட மாகாண சபை அதிகாரங்களை ஒரு சிலர் சுயநலத்துக்காக அழிக்க முடியாது. இந் நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரேயொரு மாகாண சபை கிழக்கு மாகாண சபை என்பதை மறந்துவிடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனம் ஒரு குறையில்லை





இந்தப் படங்களை நன்றாகப் பாருங்கள். கால்கள் இரண்டுமற்ற ஒரு முடமான பெண்ணை மணந்து கொண்டு, இரண்டு பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு, எவ்வளவு மகிழ்ச்சியாக குடும்பம் நடத்துகிறார்கள்?

ஷொப்பிங் போகிறார்கள்........, முற்றத்தில் குழந்தைகளுடன் குலாவுகிறார்கள்........, குடும்பமாக பார்க்கில் பொழுது போக்குகிறார்கள்...... "மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு பூரணமான அங்கங்கள் முக்கியமல்ல, பூரணமான உள்ளங்கள்தான் தேவை" என்பதற்கு இதைத்தவிர வேறு என்ன ஆதாரம் வேண்டும்?! இந்த நிலையிலும் மனைவியின் மீது அளவிலா அன்பு செலுத்தும் அந்த ஆணின் உளப்பங்கை என்னவென்று சொல்வது?! அதே நேரம் இந்தக் கஷ்டமான நிலையிலும் தனது செல்வங்கள் மீது பாச மழை பொழியும் அந்தப் பெண்ணின் அன்பை என்ன அளவிடையைக் கொண்டு அளப்பது?!!



மிகவும் குறுகிய காலத்தில் அபிவிருத்தியடைந்து பார்ப்பவர்களையெல்லாம் பிரமிக்க வைக்கின்ற பிரமாண்டங்களை உருவாக்கியதுடன் மட்டுமன்றி, தொடர்ந்தும் கடும் உழைப்பை வெளிப்படுத்தி வருகின்ற நாடுகளில் மலேசியாவுக்கு முதன்மையிடம் உண்டு. அப்படிப்பட்ட மலேசியாவில் நிமிர்ந்துநிற்கும் மிகப் பிரமாண்ட ஐந்து நட்சத்திர விடுதியையே படத்தில் காண்கிறீர்கள். 2005 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இரட்டை கோபுர அமைப்பைக் கொண்ட இவ்விடுதியில் 28 தளங்கள் உள்ளன. இங்கு மொத்தமாக இருப்பது 6118 அறைகள். அம்மாடியோவ்! இந்தளவு அறைக்கும் விருந்தினர்கள் வருகிறார்களா என்று வாய் பிளப்பது எமக்குப் புரிகிறது. இங்கு தங்க விரும்பினால் சில மாதங்களுக்கு முன்னரே பதிவு செய்துகொள்ள வேண்டுமாம். கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கும் நம்மூர் விடுதி உரிமையாளர்களின் கண்பட்டு விடப்போகிறது கவனம்!

# பிரமாண்டம்








# அசுர பலம்

ஏற்கெனவே பலர் பல்வேறு விதமான விமானங்களைக் கட்டி இழுத்து சாதனை படைத்திருப்பதை அவ்வப்போது அறிந்திருக்கின்றோம். முரசிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.


எனவே, பழையதை தூசு தட்டும் அளவிற்கு முரசுக்கு செய்திப் பஞ்சம் வந்துவிட்டது என நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.



நீங்கள் படத்தில் காண்பது புதிய சாதனை. அதுவும் உலக சாதனை. கனடாவைச் சேர்ந்த கெவின் 188.83 தொன் எடையுள்ள CC-177 ரக பயணிகள் விமானத்தை சுமார் 8.8 மீற்றர் தூரத்திற்கு கட்டியிழுத்துச் சென்றிருக்கிறார். இதனை கின்னஸ் சாதனைப் புத்தகம் அங்கீகரித்திருக்கிறது. சாதனையாளர்களுக்கு எப்பொழுதுமே சாமரம் வீசுகின்ற முரசும் குறித்த இச்சாதனையை அங்கீகரித்து தனது வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கிறது. அவ்வளவுதான்.

# சாரதிகளின் எதிரி

பொதுவாகவே வீதிகளில் காணப்படும் போக்குவரத்து ஒழுங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கோபுரங்களைக் கண்டால் வாகனச் சாரதிகளுக்கு எரிச்சல் ஏற்பட்டுவிடும். நம்நாட்டில் புதிதாக புரனமைக்கப்படுகின்ற ஏ-9 வீதியில் பயணிப்பவர்களுக்கு இதில் நல்ல அனுபவங்கள் இருக்கும். ஆனால் இங்கு பிரித்தானியாவைச் சேர்ந்த மோர்கன் 137 போக்குவரத்துக் கோபுரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றைச் சேகரிப்பதில் அண்ணனுக்கு அப்படியொரு மகிழ்ச்சியாம்.



ஈழத்தின் இளம் விதவைகளின் அவலத்தை மையக் கருவாகக் கொண்டு மகளிர் தினம் அன்று மார்ச்-08 ஆம் திகதி வெளிவரவிருக்கும் நெடுந்தீவு முகிலனின் 'வெள்ளைப் பூக்கள்' குறும்படத்திற்கான படப்பிடிப்பு யாழ்.குடா நாட்டின் பல பின்தங்கிய கிராமங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கதாநாயகனாக கிருத்திகனும், கதாநாயகியாக இந்துவும், படப்பிடிப்பாளராக அமலனும், படத்தொகுப்பாளராகச் சிவநேசனும், இசையமைப்பாளராக இசையப்பிரியனும் கடமையாற்றுகின்றனர்.

இப்படத்திற்கான பாடலை நெடுந்தீவு முகிலன் எழுதியுள்ளார். இக்குறுந்திரைப்படத்தின் இயக்குநரான நெடுந்தீவு முகிலன், தனது கலைத்துறைப் பிரவேசத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் தினமுரசு வாரமலருடன் நெருங்கிய தொடர்பினைப் பேணி தேன்கிண்ணம், சிறுகதைப் பகுதி போன்ற பக்கங்களில் தனது பெயரையும் பதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ... அச்சகத்தில் ... லிமிடெட் ... பெப்ரவரி 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.